# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2017

## மதிப்பீட்டு அறிக்கை

# 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S

ஆய்வு அபிவிருத்திக் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2017
# மதிப்பீட்டு அறிக்கை

## 22 - தமிழ்மொழியும் இலக்கியமும்

Curriculum
Assessment & Evaluation
Teaching Learning
N E T S


ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

முழுப்பதிப்புரிமையுடையது.

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2017

# அறிமுகம்

இலங்கையின் பொதுப் பரீட்சைகளில் க.பொ.த (சா.தர)ப் பரீட்சைக்கே அதிகளவான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் இப்பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழானது உயர்கல்விக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு மட்டுமன்றி நடுத்தரமட்ட வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பல்கலைக்கழகங்களில் சில பாட நெறிகளுக்கான அடிப்படைத் தகைமைக்கான அளவுகோலாகவும் கொள்ளப்படுகின்றது. இப்பரீட்சையின் நம்பகம், தகுதி, உயர் பண்புத்தரம் ஆகியனவே இதற்குக் காரணமாக அமைகின்றன.

இப்பரீட்சையில் உயர் அடைவைப் பெறுவதற்கு மாணவரும் அவர்களது அடைவை உறுதிப்படுத்துவதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் அயராது உழைக்கின்றனர். இவர்களது எதிர்பார்ப்புக்களை அடைவதற்கு உதவும் முகமாகவே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இம் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துள்ளது. இம் மதிப்பீட்டு அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் பரீட்சார்த்திகள், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடத்துக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்விசார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோர் ஆகியோருக்குப் பயனுடையனவாக அமையும். எனவே, இந்த அறிக்கையை அனேகமானோரின் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் நூலகத்தில் பேணுவது சிறந்ததாகும்.

இம் மதிப்பீட்டு அறிக்கை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். பாடக்குறிக்கோள்கள், பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள், பாட வினாப்பத்திரத்தின் அடிப்படையில் பரீட்சார்த்திகளின் அடைவு என்பன ஒவ்வொரு வினாவுக்கும் தனித்தனியே பகுதி 1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் பயன்படுத்தப்பட்டுவரும் மரபுரீதியான சோதனைக் கோட்பாடு (Classical testing theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item response theory) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இப் பகுப்பாய்வு அறிக்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உச்ச நம்பகத்தன்மை, தகுதி ஆகியவற்றைக் கொண்டதாகும்.

தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தின் I,II, III ஆகிய வினாப்பத்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் பின்னூட்டலுக்கான ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி II இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்தின் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள் ஆகியன இந்த அறிக்கையின் பகுதி III இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள் அத்தேர்ச்சி மட்டங்களை அண்மிக்கத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன பற்றிய வழிகாட்டல் இதன்மூலம் கிடைக்கப்பெறுமென நினைக்கின்றேன்.

இவ் அறிக்கையின் பண்புத்தரத்தை மேம்படுத்துவதற்கான உங்களது ஆலோசனைகள், கருத்துக்களை வரவேற்கின்றேன். இந்த அறிக்கையைத் தயாரிக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றிய கட்டுப்பாட்டுப் பரீட்சகர்களுக்கும் வளவாளர்களாகப் பங்கேற்றவர்களுக்கும் தகவல்களை வழங்கிய பிரதம/ மேலதிக பிரதம/ உதவிப் பரீட்சகர்களுக்கும் எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பணிக்குழுவினர் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பீ. சனத் பூஜித**
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2019 செப்ரெம்பர் 30
ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

| | | |
|---|---|---|
| வழிகாட்டல் | - | பீ.சனத் பூஜித<br>பரீட்சை ஆணையாளர் நாயகம் |
| ஒழுங்கமைப்பும் நெறிப்படுத்தலும் | - | கயாத்திரி அபேகுணசேகர<br>பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை) |
| நெறிப்படுத்தல் | - | எஸ். பிரணவதாசன்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர்<br>(ஆய்வு அபிவிருத்திக் கிளை - பாடசாலைப் பரீட்சைகள்) |
| பாட இணைப்பாளர்கள் | - | எம். செந்தில் வதனி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| | - | அ. கிருஷ்ணகோபி<br>உதவிப் பரீட்சை ஆணையாளர் |
| தொகுப்பாக்கம் | - | துரைசாமி இராஜேந்திரம்<br>ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்<br>திறந்த பல்கலைக்கழகம் |
| | - | சோதிநாயகி பாலசுந்தரம்<br>பிரதிப் பரீட்சை ஆணையாளர் (ஓய்வு நிலை)<br>இலங்கை பரீட்சைத் திணைக்களம். |
| ஆக்கக் குழு | - | திருமதி. அருந்ததி கிருஷ்ணபிள்ளை<br>ஓய்வுநிலை ஆசிரியை<br>கொ/விவேகானந்தா கல்லூரி. |
| | - | திருமதி. எஸ். சகாதேவன்<br>வலயக் கல்வி அலுவலகம்,<br>பிலியந்தலை, கொழும்பு. |
| கணினிப் பக்க வடிவமைப்பு | - | காஞ்சனா சுப்பிரமணியம்<br>கணினித் தரவுப் பதிவாளர் |
| | - | சிவலிங்கம் குகனேஸ்வரன்<br>கணினித் தரவுப் பதிவாளர் |

# உள்ளடக்கம்


**பகுதி** I **பக்க எண்**

1 **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான தகவல்கள்**

1.2.1 பாடத்திற்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 2

1.2.2 பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் 2

1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் 3

1.2.4 கல்வி வலயங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் 4

1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம் 7

1.3. **பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு**

1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு 8

1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 9

1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 9

1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்டுள்ள அடைவு 10

1.3.5 வினாப்பத்திரம் III இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 11

1.3.6 வினாப்பத்திரம் III இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 11

1.3.7 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்டுள்ள அடைவு 12

**பகுதி** II

2 **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1.1 வினாப்பத்திரம் I - கட்டமைப்பு 13

2.1.2 வினாப்பத்திரம் I 14

2.1.3. வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம் 18

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும் 19

2.1.5 வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்துள்ள விதம் (சதவீதத்தில்) 23

2.2 **வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு 24

2.2.2 வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் 25

2.3 **வினாப்பத்திரம் III உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.3.1 வினாப்பத்திரம் III - கட்டமைப்பு 40

2.3.2 வினாப்பத்திரம் III - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் 41

2.3.3 வினாப்பத்திரம் III இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளின் தொகுப்பும் பொதுவான ஆலோசனைகளும் 64

**பகுதி** III

3 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 65

3.2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்** 69

# பகுதி I

## 1 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்

### 1.1 பாடக் குறிக்கோள்கள்

- தமிழ்மொழியைத் தொடர்பாடற் கருவியாக காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணும் மனப்பாங்கை வெளிப்படுத்தல்.
- கலைகள், அறிவியல், தொழினுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- மொழியூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதனமாகக் கொள்ளல்.

## 1.2. பரீட்சார்த்திகளின் பாட அடைவு தொடர்பான புள்ளிவிபரங்கள்

### 1.2.1 பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

| மொழி | பாடசாலை | தனிப்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| தமிழ் | 73395 | 9239 | 82634 |
| மொத்தம் | 73395 | 9239 | 82634 |

அட்டவணை 1

### 1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்ற விதம்

| தரம் | பாடசாலைப் பரீட்சார்த்தி | | தனிப்பட்ட பரீட்சார்த்தி | | மொத்தம் | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | | |
| A | 14637 | 19.94 | 323 | 3.50 | 14960 | 18.10 |
| B | 13542 | 18.45 | 727 | 7.87 | 14269 | 17.27 |
| C | 21743 | 29.62 | 2759 | 29.86 | 24502 | 29.65 |
| S | 15315 | 20.87 | 3247 | 35.14 | 18502 | 22.46 |
| W | 8158 | 11.12 | 2183 | 23.63 | 10341 | 12.51 |
| மொத்தம் | 73395 | 100.00 | 9239 | 100.00 | 82634 | 100.00 |

அட்டவணை 2

## 1.2.3 மாவட்டங்களின் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் :

| மாவட்டம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 3125 | 858 | 27.46 | 610 | 19.52 | 795 | 25.44 | 553 | 17.70 | 2816 | 90.11 | 309 | 9.89 |
| 2. கம்பஹா | 1191 | 319 | 26.78 | 235 | 19.73 | 286 | 24.01 | 218 | 18.30 | 1058 | 88.83 | 133 | 11.17 |
| 3. களுத்துறை | 1823 | 335 | 18.38 | 287 | 15.74 | 482 | 26.44 | 383 | 21.01 | 1487 | 81.57 | 336 | 18.43 |
| 4. கண்டி | 4873 | 944 | 19.37 | 913 | 18.74 | 1343 | 27.56 | 1028 | 21.10 | 4228 | 86.76 | 645 | 13.24 |
| 5. மாத்தளை | 1353 | 239 | 17.66 | 245 | 18.11 | 367 | 27.12 | 314 | 23.21 | 1165 | 86.10 | 188 | 13.90 |
| 6. நுவரெலியா | 5884 | 1083 | 18.41 | 1288 | 21.89 | 2050 | 34.84 | 1105 | 18.78 | 5526 | 93.92 | 358 | 6.08 |
| 7. காலி | 277 | 63 | 22.74 | 46 | 16.61 | 84 | 30.32 | 47 | 16.97 | 240 | 86.64 | 37 | 13.36 |
| 8. மாத்தறை | 416 | 73 | 17.55 | 80 | 19.23 | 110 | 26.44 | 99 | 23.80 | 362 | 87.02 | 54 | 12.98 |
| 9. அம்பாந்தோட்டை | 146 | 20 | 13.70 | 28 | 19.18 | 41 | 28.08 | 37 | 25.34 | 126 | 86.30 | 20 | 13.70 |
| 10. யாழ்ப்பாணம் | 9177 | 2274 | 24.78 | 1793 | 19.54 | 2434 | 26.52 | 1626 | 17.72 | 8127 | 88.56 | 1050 | 11.44 |
| 11. கிளிநொச்சி | 2484 | 421 | 16.95 | 467 | 18.80 | 703 | 28.30 | 495 | 19.93 | 2086 | 83.98 | 398 | 16.02 |
| 12. மன்னார் | 1751 | 372 | 21.25 | 355 | 20.27 | 566 | 32.32 | 352 | 20.10 | 1645 | 93.95 | 106 | 6.05 |
| 13. வவுனியா | 2438 | 580 | 23.79 | 512 | 21.00 | 706 | 28.96 | 447 | 18.33 | 2245 | 92.08 | 193 | 7.92 |
| 14. முல்லைத்தீவு | 1802 | 405 | 22.48 | 403 | 22.36 | 546 | 30.30 | 271 | 15.04 | 1625 | 90.18 | 177 | 9.82 |
| 15. மட்டக்களப்பு | 8052 | 1943 | 24.13 | 1365 | 16.95 | 2221 | 27.58 | 1606 | 19.95 | 7135 | 88.61 | 917 | 11.39 |
| 16. அம்பாறை | 5123 | 1416 | 27.64 | 1035 | 20.20 | 1403 | 27.39 | 840 | 16.40 | 4694 | 91.63 | 429 | 8.37 |
| 17. திருகோணமலை | 5351 | 952 | 17.79 | 981 | 18.33 | 1460 | 27.28 | 1129 | 21.10 | 4522 | 84.51 | 829 | 15.49 |
| 18. குருநாகல் | 2106 | 400 | 18.99 | 380 | 18.04 | 571 | 27.11 | 511 | 24.26 | 1862 | 88.41 | 244 | 11.59 |
| 19. புத்தளம் | 2398 | 473 | 19.72 | 444 | 18.52 | 607 | 25.31 | 555 | 23.14 | 2079 | 86.70 | 319 | 13.30 |
| 20. அனுராதபுரம் | 1039 | 232 | 22.33 | 206 | 19.83 | 268 | 25.79 | 195 | 18.77 | 901 | 86.72 | 138 | 13.28 |
| 21. பொலன்னறுவை | 506 | 87 | 17.19 | 100 | 19.76 | 148 | 29.25 | 115 | 22.73 | 450 | 88.93 | 56 | 11.07 |
| 22. பதுளை | 2886 | 474 | 16.42 | 521 | 18.05 | 967 | 33.51 | 658 | 22.80 | 2620 | 90.78 | 266 | 9.22 |
| 23. மொனராகலை | 231 | 25 | 10.82 | 47 | 20.35 | 73 | 31.60 | 56 | 24.24 | 201 | 87.01 | 30 | 12.99 |
| 24. இரத்தினபுரி | 1329 | 151 | 11.36 | 250 | 18.81 | 420 | 31.60 | 318 | 23.93 | 1139 | 85.70 | 190 | 14.30 |
| 25. கேகாலை | 1810 | 412 | 22.76 | 389 | 21.49 | 483 | 26.69 | 328 | 18.12 | 1612 | 89.06 | 198 | 10.94 |
| மொத்தம் | 67571 | 14551 | 21.53 | 12980 | 19.21 | 19134 | 28.32 | 13286 | 19.66 | 59951 | 88.72 | 7620 | 11.28 |

அட்டவணை 3

## 1.2.4 கல்வி வலயங்கள் அடிப்படையில் முதல் முறையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகள் பெற்றுள்ள தரங்கள் :

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 1. கொழும்பு | 2811 | 791 | 28.14 | 546 | 19.42 | 719 | 25.58 | 499 | 17.75 | 2555 | 90.89 | 256 | 9.11 |
| 2.ஹோமாகம | 143 | 17 | 11.89 | 21 | 14.69 | 31 | 21.68 | 32 | 22.38 | 101 | 70.63 | 42 | 29.37 |
| 3. ஸ்ரீ ஜயவர்த்தனபுர | 23 | 2 | 8.70 | 8 | 34.78 | 7 | 30.43 | 3 | 13.04 | 20 | 86.96 | 3 | 13.04 |
| 4. பிலியந்தல | 148 | 48 | 32.43 | 35 | 23.65 | 38 | 25.68 | 19 | 12.84 | 140 | 94.59 | 8 | 5.41 |
| 5. கம்பஹா | 336 | 83 | 24.70 | 66 | 19.64 | 63 | 18.75 | 64 | 19.05 | 276 | 82.14 | 60 | 17.86 |
| 6. மினுவாங்கொட | 242 | 75 | 30.99 | 65 | 26.86 | 45 | 18.60 | 40 | 16.53 | 225 | 92.98 | 17 | 7.02 |
| 7. நீர்கொழும்பு | 272 | 69 | 25.37 | 42 | 15.44 | 89 | 32.72 | 46 | 16.91 | 246 | 90.44 | 26 | 9.56 |
| 8. களனி | 341 | 92 | 26.98 | 62 | 18.18 | 89 | 26.10 | 68 | 19.94 | 311 | 91.20 | 30 | 8.80 |
| 9. களுத்துறை | 1297 | 263 | 20.28 | 213 | 16.42 | 357 | 27.53 | 252 | 19.43 | 1085 | 83.65 | 212 | 16.35 |
| 10. மத்துகம | 197 | 23 | 11.68 | 30 | 15.23 | 40 | 20.30 | 45 | 22.84 | 138 | 70.05 | 59 | 29.95 |
| 11. ஹொரணை | 329 | 49 | 14.89 | 44 | 13.37 | 85 | 25.84 | 86 | 26.14 | 264 | 80.24 | 65 | 19.76 |
| 12. கண்டி | 970 | 245 | 25.26 | 220 | 22.68 | 266 | 27.42 | 166 | 17.11 | 897 | 92.47 | 73 | 7.53 |
| 13. தெனுவர | 630 | 139 | 22.06 | 127 | 20.16 | 174 | 27.62 | 108 | 17.14 | 548 | 86.98 | 82 | 13.02 |
| 14. கம்பளை | 1225 | 206 | 16.82 | 234 | 19.10 | 359 | 29.31 | 267 | 21.80 | 1066 | 87.02 | 159 | 12.98 |
| 15. தெல்தெனியா | 215 | 19 | 8.84 | 31 | 14.42 | 76 | 35.35 | 63 | 29.30 | 189 | 87.91 | 26 | 12.09 |
| 16. வத்தேகம | 886 | 130 | 14.67 | 151 | 17.04 | 234 | 26.41 | 218 | 24.60 | 733 | 82.73 | 153 | 17.27 |
| 17. கட்டுகஸ்தொட்ட | 947 | 205 | 21.65 | 150 | 15.84 | 234 | 24.71 | 206 | 21.75 | 795 | 83.95 | 152 | 16.05 |
| 18. மாத்தளை | 1124 | 193 | 17.17 | 196 | 17.44 | 314 | 27.94 | 270 | 24.02 | 973 | 86.57 | 151 | 13.43 |
| 19. கலேவெல | 182 | 40 | 21.98 | 36 | 19.78 | 44 | 24.18 | 32 | 17.58 | 152 | 83.52 | 30 | 16.48 |
| 20. நாஉல | 47 | 6 | 12.77 | 13 | 27.66 | 9 | 19.15 | 12 | 25.53 | 40 | 85.11 | 7 | 14.89 |
| 21. வில்கமுவ | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 22. நுவரெலியா | 2401 | 367 | 15.29 | 520 | 21.66 | 888 | 36.98 | 466 | 19.41 | 2241 | 93.34 | 160 | 6.66 |
| 23. கொத்மலை | 645 | 129 | 20.00 | 113 | 17.52 | 208 | 32.25 | 133 | 20.62 | 583 | 90.39 | 62 | 9.61 |
| 24. ஹட்டன் | 2201 | 504 | 22.90 | 519 | 23.58 | 705 | 32.03 | 374 | 16.99 | 2102 | 95.50 | 99 | 4.50 |
| 25. வலப்பனை | 514 | 70 | 13.62 | 110 | 21.40 | 199 | 38.72 | 110 | 21.40 | 489 | 95.14 | 25 | 4.86 |
| 26. ஹங்குரன்கெத்த | 123 | 13 | 10.57 | 26 | 21.14 | 50 | 40.65 | 22 | 17.89 | 111 | 90.24 | 12 | 9.76 |
| 27. காலி | 198 | 54 | 27.27 | 28 | 14.14 | 58 | 29.29 | 35 | 17.68 | 175 | 88.38 | 23 | 11.62 |
| 28. எல்பிட்டிய | 37 | 6 | 16.22 | 8 | 21.62 | 11 | 29.73 | 6 | 16.22 | 31 | 83.78 | 6 | 16.22 |
| 29. அம்பலாங்கொடை | 10 | 1 | 10.00 | 2 | 20.00 | 4 | 40.00 | 2 | 20.00 | 9 | 90.00 | 1 | 10.00 |
| 30. உடுகம | 32 | 2 | 6.25 | 8 | 25.00 | 11 | 34.38 | 4 | 12.50 | 25 | 78.13 | 7 | 21.88 |
| 31. மாத்தறை | 180 | 43 | 23.89 | 44 | 24.44 | 41 | 22.78 | 31 | 17.22 | 159 | 88.33 | 21 | 11.67 |
| 32. அக்குரஸ்ஸ | 116 | 20 | 17.24 | 21 | 18.10 | 31 | 26.72 | 32 | 27.59 | 104 | 89.66 | 12 | 10.34 |
| 33. முலடியன-ஹக்மன | 19 | 3 | 15.79 | 4 | 21.05 | 3 | 15.79 | 8 | 42.11 | 18 | 94.74 | 1 | 5.26 |
| 34. மொறவக்க | 101 | 7 | 6.93 | 11 | 10.89 | 35 | 34.65 | 28 | 27.72 | 81 | 80.20 | 20 | 19.80 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 35. தங்காலை | 6 | 0 | 0.00 | 2 | 33.33 | 1 | 16.67 | 1 | 16.67 | 4 | 66.67 | 2 | 33.33 |
| 36. அம்பாந்தோட்டை | 133 | 20 | 15.04 | 26 | 19.55 | 38 | 28.57 | 33 | 24.81 | 117 | 87.97 | 16 | 12.03 |
| 37. வலஸ்முல்லை | 7 | 0 | 0.00 | 0 | 0.00 | 2 | 28.57 | 3 | 42.86 | 5 | 71.43 | 2 | 28.57 |
| 38. யாழ்ப்பாணம் | 3244 | 1014 | 31.26 | 644 | 19.85 | 852 | 26.26 | 471 | 14.52 | 2981 | 91.89 | 263 | 8.11 |
| 39. தீவகம் | 652 | 68 | 10.43 | 96 | 14.72 | 190 | 29.14 | 143 | 21.93 | 497 | 76.23 | 155 | 23.77 |
| 40. தென்மராட்சி | 930 | 188 | 20.22 | 189 | 20.32 | 259 | 27.85 | 159 | 17.10 | 795 | 85.48 | 135 | 14.52 |
| 41. வலிகாமம் | 2802 | 567 | 20.24 | 557 | 19.88 | 722 | 25.77 | 592 | 21.13 | 2438 | 87.01 | 364 | 12.99 |
| 42. வடமராட்சி | 1549 | 437 | 28.21 | 307 | 19.82 | 411 | 26.53 | 261 | 16.85 | 1416 | 91.41 | 133 | 8.59 |
| 43. கிளிநொச்சி | 2484 | 421 | 16.95 | 467 | 18.80 | 703 | 28.30 | 495 | 19.93 | 2086 | 83.98 | 398 | 16.02 |
| 44. மன்னார் | 1374 | 325 | 23.65 | 287 | 20.89 | 431 | 31.37 | 258 | 18.78 | 1301 | 94.69 | 73 | 5.31 |
| 45. மடு | 377 | 47 | 12.47 | 68 | 18.04 | 135 | 35.81 | 94 | 24.93 | 344 | 91.25 | 33 | 8.75 |
| 46. வவுனியா - தெற்கு | 1888 | 506 | 26.80 | 400 | 21.19 | 530 | 28.07 | 325 | 17.21 | 1761 | 93.27 | 127 | 6.73 |
| 47. வவுனியா - வடக்கு | 550 | 74 | 13.45 | 112 | 20.36 | 176 | 32.00 | 122 | 22.18 | 484 | 88.00 | 66 | 12.00 |
| 48. முல்லைத்தீவு | 1196 | 303 | 25.33 | 283 | 23.66 | 331 | 27.68 | 162 | 13.55 | 1079 | 90.22 | 117 | 9.78 |
| 49. துணுக்காய் | 606 | 102 | 16.83 | 120 | 19.80 | 215 | 35.48 | 109 | 17.99 | 546 | 90.10 | 60 | 9.90 |
| 50. மட்டக்களப்பு | 2316 | 682 | 29.45 | 451 | 19.47 | 604 | 26.08 | 391 | 16.88 | 2128 | 91.88 | 188 | 8.12 |
| 51. கல்குடா | 1393 | 217 | 15.58 | 204 | 14.64 | 404 | 29.00 | 374 | 26.85 | 1199 | 86.07 | 194 | 13.93 |
| 52. பட்டிருப்பு | 1479 | 250 | 16.90 | 262 | 17.71 | 410 | 27.72 | 303 | 20.49 | 1225 | 82.83 | 254 | 17.17 |
| 53. மட்டக்களப்பு -மத்தி | 1962 | 655 | 33.38 | 307 | 15.65 | 518 | 26.40 | 344 | 17.53 | 1824 | 92.97 | 138 | 7.03 |
| 54. மட்டக்களப்பு -மேற்கு | 902 | 139 | 15.41 | 141 | 15.63 | 285 | 31.60 | 194 | 21.51 | 759 | 84.15 | 143 | 15.85 |
| 55. அம்பாறை | 7 | 0 | 0.00 | 2 | 28.57 | 2 | 28.57 | 1 | 14.29 | 5 | 71.43 | 2 | 28.57 |
| 56. கல்முனை | 2410 | 738 | 30.62 | 484 | 20.08 | 672 | 27.88 | 337 | 13.98 | 2231 | 92.57 | 179 | 7.43 |
| 57. சம்மாந்துறை | 1418 | 319 | 22.50 | 266 | 18.76 | 358 | 25.25 | 272 | 19.18 | 1215 | 85.68 | 203 | 14.32 |
| 58. மஹாஓய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 59. தெஹியத்தகண்டிய | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 60. அக்கரைப்பற்று | 1288 | 359 | 27.87 | 283 | 21.97 | 371 | 28.80 | 230 | 17.86 | 1243 | 96.51 | 45 | 3.49 |
| 61. திருக்கோவில் | 916 | 181 | 19.76 | 165 | 18.01 | 282 | 30.79 | 199 | 21.72 | 827 | 90.28 | 89 | 9.72 |
| 62. திருகோணமலை | 1496 | 380 | 25.40 | 338 | 22.59 | 402 | 26.87 | 228 | 15.24 | 1348 | 90.11 | 148 | 9.89 |
| 63. மூதூர் | 1173 | 154 | 13.13 | 217 | 18.50 | 365 | 31.12 | 265 | 22.59 | 1001 | 85.34 | 172 | 14.66 |
| 64. கந்தளாய் | 135 | 32 | 23.70 | 27 | 20.00 | 43 | 31.85 | 22 | 16.30 | 124 | 91.85 | 11 | 8.15 |
| 65. கிண்ணியா | 1413 | 181 | 12.81 | 194 | 13.73 | 315 | 22.29 | 354 | 25.05 | 1044 | 73.89 | 369 | 26.11 |
| 66. திருகோணமலை வடக்கு | 218 | 24 | 11.01 | 40 | 18.35 | 53 | 24.31 | 61 | 27.98 | 178 | 81.65 | 40 | 18.35 |
| 67. குருநாகல் | 460 | 103 | 22.39 | 88 | 19.13 | 118 | 25.65 | 96 | 20.87 | 405 | 88.04 | 55 | 11.96 |
| 68. குளியாப்பிட்டிய | 290 | 37 | 12.76 | 46 | 15.86 | 84 | 28.97 | 74 | 25.52 | 241 | 83.10 | 49 | 16.90 |
| 69 நிக்கவெரட்டிய | 232 | 22 | 9.48 | 46 | 19.83 | 73 | 31.47 | 66 | 28.45 | 207 | 89.22 | 25 | 10.78 |
| 70. மாகோ | 190 | 30 | 15.79 | 35 | 18.42 | 46 | 24.21 | 53 | 27.89 | 164 | 86.32 | 26 | 13.68 |
| 71. கிரியுள்ள | 628 | 125 | 19.90 | 113 | 17.99 | 172 | 27.39 | 154 | 24.52 | 564 | 89.81 | 64 | 10.19 |
| 72. இப்பாகமுவ | 306 | 83 | 27.12 | 52 | 16.99 | 78 | 25.49 | 68 | 22.22 | 281 | 91.83 | 25 | 8.17 |

| கல்வி வலயம் | தோற்றியவர் எண்ணிக்கை | மிகச் சிறந்த சித்தி (A) பெற்றவர் | | விசேட திறமைச் சித்தி (B) பெற்றவர் | | திறமைச் சித்தி (C) பெற்றவர் | | சாதாரண சித்தி (S) பெற்றவர் | | சித்தி (A+B+C+S) பெற்றவர் | | சித்தி யடையாதவர் (W) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| 73. புத்தளம் | 2130 | 440 | 20.66 | 402 | 18.87 | 529 | 24.84 | 488 | 22.91 | 1859 | 87.28 | 271 | 12.72 |
| 74 சிலாபம் | 268 | 33 | 12.31 | 42 | 15.67 | 78 | 29.10 | 67 | 25.00 | 220 | 82.09 | 48 | 17.91 |
| 75. அனுராதபுரம் | 342 | 65 | 19.01 | 61 | 17.84 | 88 | 25.73 | 72 | 21.05 | 286 | 83.63 | 56 | 16.37 |
| 76. தபுத்தேகம் | 36 | 9 | 25.00 | 8 | 22.22 | 5 | 13.89 | 7 | 19.44 | 29 | 80.56 | 7 | 19.44 |
| 77. கெக்கிராவை | 334 | 63 | 18.86 | 67 | 20.06 | 83 | 24.85 | 68 | 20.36 | 281 | 84.13 | 53 | 15.87 |
| 78. கலென்பிந்துனுவெவ | 155 | 46 | 29.68 | 33 | 21.29 | 43 | 27.74 | 25 | 16.13 | 147 | 94.84 | 8 | 5.16 |
| 79. | 172 | 49 | 28.49 | 37 | 21.51 | 49 | 28.49 | 23 | 13.37 | 158 | 91.86 | 14 | 8.14 |
| 80. பொலன்னறுவ | 389 | 78 | 20.05 | 79 | 20.31 | 107 | 27.51 | 76 | 19.54 | 340 | 87.40 | 49 | 12.60 |
| 81. ஹிங்குரக் கொடை | 13 | 0 | 0.00 | 1 | 7.69 | 3 | 23.08 | 9 | 69.23 | 13 | 100.00 | 0 | 0.00 |
| 82. திம்புலாகல | 104 | 9 | 8.65 | 20 | 19.23 | 38 | 36.54 | 30 | 28.85 | 97 | 93.27 | 7 | 6.73 |
| 83. பதுளை | 777 | 174 | 22.39 | 158 | 20.33 | 226 | 29.09 | 163 | 20.98 | 721 | 92.79 | 56 | 7.21 |
| 84. பண்டாரவளை | 936 | 126 | 13.46 | 174 | 18.59 | 327 | 34.94 | 218 | 23.29 | 845 | 90.28 | 91 | 9.72 |
| 85. மஹியங்கனை | 17 | 1 | 5.88 | 1 | 5.88 | 6 | 35.29 | 3 | 17.65 | 11 | 64.71 | 6 | 35.29 |
| 86. வெலிமடை | 511 | 97 | 18.98 | 93 | 18.20 | 172 | 33.66 | 113 | 22.11 | 475 | 92.95 | 36 | 7.05 |
| 87. பசறை | 560 | 61 | 10.89 | 82 | 14.64 | 203 | 36.25 | 146 | 26.07 | 492 | 87.86 | 68 | 12.14 |
| 88. வியலுவ | 85 | 15 | 17.65 | 13 | 15.29 | 33 | 38.82 | 15 | 17.65 | 76 | 89.41 | 9 | 10.59 |
| 89. மொனராகலை | 119 | 9 | 7.56 | 27 | 22.69 | 40 | 33.61 | 26 | 21.85 | 102 | 85.71 | 17 | 14.29 |
| 90. வெல்லவாய | 7 | 0 | 0.00 | 0 | 0.00 | 4 | 57.14 | 2 | 28.57 | 6 | 85.71 | 1 | 14.29 |
| 91. பிபிலை | 105 | 16 | 15.24 | 20 | 19.05 | 29 | 27.62 | 28 | 26.67 | 93 | 88.57 | 12 | 11.43 |
| 92. இரத்தினபுரி | 497 | 54 | 10.87 | 90 | 18.11 | 156 | 31.39 | 132 | 26.56 | 432 | 86.92 | 65 | 13.08 |
| 93. பலாங்கொடை | 356 | 53 | 14.89 | 69 | 19.38 | 113 | 31.74 | 87 | 24.44 | 322 | 90.45 | 34 | 9.55 |
| 94. நிவித்திகல | 226 | 11 | 4.87 | 26 | 11.50 | 53 | 23.45 | 60 | 26.55 | 150 | 66.37 | 76 | 33.63 |
| 95. எம்பிலிபிடிய | 250 | 33 | 13.20 | 65 | 26.00 | 98 | 39.20 | 39 | 15.60 | 235 | 94.00 | 15 | 6.00 |
| 96. கேகாலை | 214 | 38 | 17.76 | 40 | 18.69 | 59 | 27.57 | 44 | 20.56 | 181 | 84.58 | 33 | 15.42 |
| 97. மாவனல்லை | 908 | 253 | 27.86 | 203 | 22.36 | 226 | 24.89 | 150 | 16.52 | 832 | 91.63 | 76 | 8.37 |
| 98. தெஹிஓவிட்ட | 688 | 121 | 17.59 | 146 | 21.22 | 198 | 28.78 | 134 | 19.48 | 599 | 87.06 | 89 | 12.94 |
| மொத்தம் | 67571 | 14551 | 21.53 | 12980 | 19.21 | 19134 | 28.32 | 13286 | 19.66 | 59951 | 88.72 | 7620 | 11.28 |

**அட்டவணை 4**

### 1.2.5 வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்ற விதம்

| வகுப்பாயிடை | மீடிறன் | சதவீத மீடிறன் | திரள் மீடிறன் | சதவீத திரள் மீடிறன் |
|---|---|---|---|---|
| 91 - 100 | 144 | 0.17 | 82634 | 100.00 |
| 81 - 90 | 4400 | 5.32 | 82490 | 99.83 |
| 71 - 80 | 11528 | 13.95 | 78090 | 94.50 |
| 61 - 70 | 14832 | 17.95 | 66562 | 80.55 |
| 51 - 60 | 17127 | 20.73 | 51730 | 62.60 |
| 41 - 50 | 14619 | 17.69 | 34603 | 41.88 |
| 31 - 40 | 10515 | 12.72 | 19984 | 24.18 |
| 21 - 30 | 5880 | 7.12 | 9469 | 11.46 |
| 11 - 20 | 2742 | 3.32 | 3589 | 4.34 |
| 01 - 10 | 845 | 1.02 | 847 | 1.03 |
| 00 - 00 | 2 | 0.00 | 2 | 0.00 |

அட்டவணை 5

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து தகவல்களைப் பெறும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.

உ-ம் : இப்பாடத்தில் 11528 மாணவர்கள் 71-80 இற்கும் இடைப்பட்ட வகுப்பாயிடையில் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இது 13.95% ஆகும். 12.72% த்தினர் அதாவது 10515 பேர் 31-40 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## 1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

### 1.3.1 வினாப்பத்திரம் I இல் பெறப்பட்டுள்ள அடைவு




**வரைபு 1** இது RD/16/05/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகிறது.

உதாரணம் - மேலே உள்ள வரைபின்படி 36 ஆம் வினாவுக்குச் சரியான விடையளித்தோர் 10% ஆகும். 4 ஆம் வினாவுக்கு சரியான விடையளித்தோர் 72% ஆகும். இதற்கேற்ப 36 ஆம் வினாவை இலகுதன்மை குறைந்ததாகவும் (கடினமானதாகவும்) 4 ஆம் வினாவை இலகுதன்மை கூடியதாகவும் (இலகுவானதாகவும் ) கருதலாம்.

### 1.3.2 வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.




**வரைபு 2** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது)

RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இவ்வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் -

1-5 வரையான வினாக்கள் கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டியவையாகும். எனினும் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வினாக்களை 99% ஆனோரும் ஐந்தாம் வினாவை 98% ஆனோரும் தெரிவு செய்துள்ளனர்.

### 1.3.3 வினாப்பத்திரம் II இல் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




**வரைபு 3** - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் :

1 ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும்.

புள்ளி வீச்சு 00-25% இடையில் (0-5 புள்ளிகள்) 16% ஆனோர்,புள்ளிவீச்சு 26-50% இடையில் (6-10 புள்ளிகள்) 33% ஆனோர், புள்ளிவீச்சு 51-75% இடையில் (11-15 புள்ளிகள்) 38% ஆனோர், புள்ளிவீச்சு 76-100% இடையில் (16-20 புள்ளிகள்) 12% ஆனோர் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## 1.3.4 வினாப்பத்திரம் II இல் பெறப்பட்டுள்ள அடைவு

க. பொ. த. (சா.தர)ப் பரீட்சை - 2017
22 - தமிழ்மொழியும் இலக்கியமும் - வினாப்பத்திரம் II
இலகுச்சுட்டி




**வரைபு 4** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)
இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் :- வினா 1 இல் உபபிரிவு (viii) - (அ) வினாவின் இலகுதன்மை 98% ஆகவும் பிரிவு (i) இன் இலகுத்தன்மை 12% ஆகவும் காணப்படுகின்றது.
வினா இலக்கம் 2 இன் இலகுதன்மை 75% ஆகக் காணப்படுகின்றது.
வினா இலக்கம் 3 இல் 71% ஆகவுள்ளது.
வினா இலக்கம் 4 இல் உபபிரிவு (i) வினாவுக்கு 97%ஆகவும் உபபிரிவு (iv) வினாவுக்கு 72% ஆகவும் காணப்படுகின்றது.
வினா இலக்கம் 5 இன் இலகுதன்மை 60% ஆகக் காணப்படுகின்றது.

### 1.3.5 வினாப்பத்திரம் III - வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்




வரைபு 5 - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது)

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் - 1-4 வரையான வினாக்கள் கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டியவை ஆகும். எனினும் முதலாம், இரண்டாம் வினாக்களை 99% ஆனவர்களும் மூன்றாம், நான்காம் வினாக்களை 96% ஆனவர்களும் தெரிவு செய்துள்ளார்கள். அதேவேளை 5,6,7 ஆம் வினாக்களை முறையே 47, 40, 10 சதவீனமானவர்கள் தெரிவுசெய்துள்ளனர். இவை தெரிவு வினாக்களாகும்.

### 1.3.6 வினாப்பத்திரம் III இற்கு புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம்




வரைபு 6 - (RD/16/02/OL படிவத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)

இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை உதாரணம் மூலம் காட்டப்படுகிறது.

உதாரணம் :

1 ஆம் வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும்.

புள்ளி வீச்சு 00-25% இடையில் (0-5 புள்ளிகள்) 20% ஆனோர், புள்ளிவீச்சு 26-50% இடையில் (6-10 புள்ளிகள்) 23% ஆனோர், புள்ளிவீச்சு 51-75% இடையில் (11-15புள்ளிகள்) 34% ஆனோர், புள்ளி வீச்சு 76-100% இடையில் (16-20புள்ளிகள்) 24% ஆனோர் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

### 1.3.7 வினாப்பத்திரம் III இல் பெறப்பட்டுள்ள அடைவு




**வரைபு 7** (இது RD/16/04/OL படிவங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது.)
இவ் வரைபிலிருந்து தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணம் மூலம் விளக்கப்படுகின்றது.

உதாரணம் :- வினா 1 இல் iii (அ),(v) (ஆ),(x) (ஆ) பிரிவுகளுக்கு 99% சதவீதமானோர் சரியான விடையளித்துள்ளனர். இவை இலகுதன்மை கூடியனவாகவும். முதலாம் வினாவின் (viii) ஆம் பிரிவின் (அ) வினா கடினத்தன்மை உடையதாகவும் அமைந்துள்ளன.

# பகுதி II

## 2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.1 வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

#### 2.1.1 வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு

நேரம் :- 1 மணித்தியாலம், மொத்தம் 40 புள்ளிகள்

- இவ்வினாத்தாள் நான்கு தெரிவுகளைக் கொண்ட 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்குமுரிய (1), (2), (3), (4) ஆகிய தெரிவுகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- எல்லா வினாக்களுக்கும் விடைகள் அளிக்கப்படல் வேண்டும்.
- 1-20 வரையான வினாக்கள் பெரும்பாலும் மொழி வளத்தையும்
- 21-30 வரையான வினாக்கள் பிரயோக இலக்கணத்திறனையும்
- 31-40 வரையான வினாக்கள் கிரகித்தல், மொழி அமைப்பு, கலைச்சொல் அறிவு, பந்தியாக்கம் போன்ற திறன்களையும்

மதிப்பிடுவனவாக அமைந்துள்ளன.

## 2.1.2 வினாப்பத்திரம் I

● தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**1.** 'முழங்கு **திரைப்** புனலருவி...' - இங்கு திரை என்பது
(1) மறைப்பு (2) ஆடை (3) அலை (4) வரி

**2.** '**பங்கப்** பழனத் துழுமுழவர்....' - இங்கு பங்கம் என்பது
(1) தாமரை (2) பாதிப்பு (3) பங்கீடு (4) சேறு

**3.** 'நாயனையார் **கேண்மை** தழீஇக் கொளல் வேண்டும்.' - கேண்மை என்பதன் எதிர்க்கருத்து
(1) கேட்காமை (2) நன்மை (3) தீமை (4) பகைமை

**4.** 'நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத **அனுகூலம்** அளித்தது.' - அனுகூலம் என்பதன் எதிர்க்கருத்து
(1) பிரதிகூலம் (2) நிர்மூலம் (3) ஊனம் (4) சகுனம்

**5.** 'இரவு பகல் **பல மூல சாகம்** நுகர்ந்து உயிர் வாழ்தல் இனிது நன்றே.' - இங்கு பல மூல சாகம் எனும் சொற்றொடரால் குறிப்பிடப்படுவன, முறையே
(1) கிழங்கு, பழம், இலை (2) பழம், கிழங்கு, இலை
(3) இலை, பழம், கிழங்கு (4) இலை, கிழங்கு, பழம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**6.** 'பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்.' - அப்பீல் என்பதற்கு நிகரான தமிழ்ச் சொல்
(1) முறையீடு (2) குற்றச்சாட்டு (3) மேன்முறையீடு (4) பிடியாணை

**7.** ஒத்தகருத்துள்ள சொற்களின் இணைப்பு
(1) எதிர்வாதம் - பிரதிவாதம் (2) மந்தமாருதம் - சண்டமாருதம்
(3) சௌக்கியம் - அசௌக்கியம் (4) கதி - நிர்க்கதி

**8.** சினிமா, இலக்கியம் முதலான கலைத்துறைகளில் சிம்பல் (Symbol) ஓர் உத்தியாக இடம்பெறுகிறது. - இங்கு சிம்பல் என்பதற்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல்
(1) வடிவம் (2) குறியீடு (3) படிமம் (4) சின்னம்

**9.** ஒலி, பாம்பு என்னும் பொருள்களைத் தரும் சொல்
(1) பணி (2) ஓசை (3) சர்ப்பம் (4) அரவம்

**10.** பிடி என்பது பெண் யானையைக் குறிப்பது போல, பெண் குரங்கைக் குறிக்கும் சொல்
(1) கடுவன் (2) பறழ் (3) மந்தி (4) பிணை

**11.** பின்வருவனவற்றுள் இணைமொழி **அல்லாதது**
(1) பச்சைப்பசேல் (2) தோட்டந்துரவு (3) சூதுவாது (4) இன்னார் இனியார்

**12.** உற்சாகமூட்டல் என்னும் பொருள்தரும் மரபுத்தொடர்
(1) தட்டிப்பறித்தல் (2) தட்டிக்கொடுத்தல் (3) தட்டிப்பேசுதல் (4) தட்டிப்பார்த்தல்

**13.** புதிதாகச் செய்யப்பட்ட தேர், கப்பல் என்பவற்றை முதன்முதலாக ஓட்டிப்பார்த்தலைக் குறிக்கும் மரபுச்சொல்
(1) வெள்ளோட்டம் (2) ஒத்திகை (3) அரங்கேற்றம் (4) மேலோட்டம்

**14.** அரசனுடைய சபா மண்டபத்தைக் குறிக்கும் சொல்
(1) அந்தப்புரம் (2) உப்பரிகை (3) நிந்தகம் (4) ஓலக்கம்

**15.** தங்களைச் சார்ந்தவர்களின் குறைகள் பொருட்படுத்தப்படுவதில்லை என்பதை உணர்த்தும் பழமொழி
(1) இக்கரைக்கு அக்கரை பச்சை
(2) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
(3) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது
(4) தனக்கு வந்தால்தான் தெரியும் தலைவலியும் காய்ச்சலும்

16. காலத்தே பயிர்செய் என்ற பழமொழியின் கருத்து
(1) பயிரிடுவதற்கென்று காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.
(2) உரிய காலத்தில் எதையும் செய்துவிட வேண்டும்.
(3) பருவ காலங்கள் பயிர்ச்செய்கைக்கு உகந்தவை.
(4) காலந் தவறிப் பயிர் செய்தால் விளைச்சல் குறையும்.

17. பயனற்ற செயலை உணர்த்தும் உவமைத்தொடர்
(1) அணை கடந்த வெள்ளம் போல
(2) ஆனை வாயிற் கரும்பு போல
(3) ஆற்றிலே கரைத்த புளி போல
(4) ஆனை உண்ட விளாம்பழம் போல

18. செழிப்போடு அழிவின்றி வாழ ஒருவரை வாழ்த்துவதற்குப் பொருத்தமான அருஞ்சொற்றொடர்
(1) ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி
(2) கண்ணுக்குக் கண்ணாக
(3) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்
(4) வைத்தகண் வாங்காமல் பார்த்துப் பார்த்து

19. ‘குறுகுறு நடந்து சிறுகை நீட்டி’ - இங்கு குறுகுறு என்பது
(1) அடுக்குத்தொடர்
(2) இணைமொழி
(3) ஒலிக்குறிப்புச்சொல்
(4) இரட்டைக்கிளவி

20. ‘ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்.’ - இங்கு அவுக்கென என்னும் ஒலிக்குறிப்புச் சொல் உணர்த்தும் பொருள்
(1) கோபம் (2) பயம் (3) விரைவு (4) ஆச்சரியம்

● பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

21. ககரம் எந்தச் சொல்லில் ‘h’ என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிக்கிறது ?
(1) கடல் (2) தங்கம் (3) கதவு (4) மேகம்

22. பின்வருவனவற்றுள் பகுபதம்
(1) பாடல் (2) சிங்கம் (3) களம் (4) அன்பு

23. பின்வருவனவற்றுள் ஆக்க வினையடை
(1) நேற்று (2) அங்கே (3) விரைவாக (4) காலையில்

24. ஓடு என்னும் உருபு அடைமொழிப் பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) அன்போடு பேசினான்.
(2) பாலோடு கலந்தான்.
(3) நண்பனோடு சென்றான்.
(4) வீட்டோடு இருந்தான்.

25. தோன்றல் விகாரப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்
(1) பலாப்பழம் (2) மாமரம் (3) மரவேர் (4) மரக்கொப்பு

26. பாடசாலைக்குச் செல்லவில்லை. - இங்கு செல்லவில்லை என்பது
(1) தன்மை வினைமுற்று
(2) படர்க்கை வினைமுற்று
(3) முன்னிலை வினைமுற்று
(4) மூவிடத்துக்கும் பொதுவான வினைமுற்று

27. ‘என்றலுமே அடியின்மிசை நெடிது வீழ்ந்து அழுவானை…’ - இங்கு அழுவான் என்பது
(1) தெரிநிலை வினைமுற்று
(2) குறிப்பு வினைமுற்று
(3) வினையாலணையும் பெயர்
(4) இடுகுறிச் சிறப்புப்பெயர்

28. அகராதி ஒழுங்கில் **அமையாத** சொற்றொகுதி
(1) காடு, நாடு, பாடு, வாடு
(2) ஞாயிறு, சந்திரன், சூரியன், செவ்வாய்
(3) கட்டில், சட்டி, தாய், நாடு
(4) வாய்க்கால், விலை, வேர்க்கடலை, வெளவால்

● **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

**29.** (1) பெயர்ச்சொல் : பால், மரம், மாலை
(2) வினைச்சொல் : வந்தான், இல்லை, விழுந்த
(3) பெயரெச்சம் : வந்த, பாடுகின்ற, விழுந்து
(4) வினையெச்சம் : ஓடி, படித்து, பாடுவதற்கு

**30.** (1) வேற்றுமைத்தொகை : மரம் தறித்தான், பாடசாலை சென்றான், தங்க வளையல்
(2) வினைத்தொகை : ஏவுகணை, ஓடுமீன், சுடுசோறு
(3) பண்புத்தொகை : கரும்பலகை, வெண்மேகம், செந்தாமரை
(4) உம்மைத்தொகை : வெற்றிலை பாக்கு, பழப்பாக்கு, பாக்கு வெற்றிலை

● புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**31.** உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட பலர் தமது ...................... இழந்தனர்.
(1) சந்தாப்பணத்தை (2) கட்டுப்பணத்தை
(3) முற்பணத்தை (4) சலுகைப்பணத்தை

**32.** வரவுசெலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகையை ஈடுசெய்வதற்காக அரசாங்கம் புதிய ...................... விதிக்கவுள்ளது.
(1) பிரேரணைகளை (2) கடன்களை
(3) மானியங்களை (4) வரிகளை

**33.** விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு உர ...................... வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
(1) நிவாரணம் (2) மானியம்
(3) ஊதியம் (4) சன்மானம்

**34.** இராஜராஜ சோழனுடைய பெருமைகளை எடுத்துரைக்கின்ற ...................... பல சாசனங்களிலே காணப்படுகின்றன.
(1) ஆவணங்கள் (2) புனைந்துரைகள்
(3) கீர்த்தனைகள் (4) மெய்க்கீர்த்திகள்

● வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

**35.** உலகிலுள்ள தொழில் ஒவ்வொன்றும் தனித்துவமானதும் அத்தியாவசியமானதுமாக ...........
(1) விளங்குகின்றன. (2) விளங்குகின்றது.
(3) அமைகின்றன. (4) கொள்ள வேண்டியன.

**36.** மாணவர் குழுக்கள் ஊரூராகச் சென்று வெள்ள நிவாரணத்துக்காக பொருள்களையும் பணத்தையும் ...........
(1) சேகரித்தன. (2) சேர்த்தார்கள். (3) சேர்த்தார். (4) சேகரித்தனர்.

● தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

தென்னங் குரும்பைபோல் தலையே - கறுத்துச்
சிறுத்த மிளகுபோல் கண்கள்
முன்னும் பின்னும் சிறு கால்கள் - வளையும்
முதுகில் இரண்டு வெண்கோடு
கன்னங் கரிய கோட்டுடனே - தினையின்
கதிரைப் போன்ற நெடுவாலே
தின்னும் கொய்யா மரத்தினிலே - தாவிச்
செல்லும் துள்ளும் அணிற்பிள்ளை.

**37.** இங்கு கவிஞர் கூறுவது அணிற்பிள்ளையின்

(1) தோற்றம் பற்றி. (2) செயற்பாடு பற்றி.
(3) தோற்றமும் செயலும் பற்றி. (4) சுறுசுறுப்புப் பற்றி.

**38.** இப்பாடலில் எத்தனை உவமைகள் இடம்பெற்றுள்ளன ?

(1) இரண்டு (2) மூன்று (3) நான்கு (4) ஐந்து

**39.** இங்கு 'கன்னங்கரிய' என்பது

(1) அடுக்குத்தொடர் (2) இணைமொழித்தொடர்
(3) உவமைத்தொடர் (4) அடுக்கிடுக்குத்தொடர்

● கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

**40.** அ - இன்பம் வரும்போது மகிழ்கிறோம்.
ஆ - அந்த இரண்டும் எல்லோரது வாழ்க்கையிலும் வந்து போகின்றன.
இ - ஆனால் துன்பம் வரும்போது துவண்டுவிடுகிறோம்.
ஈ - இன்பமும் துன்பமும் கலந்ததே உலகம்.
உ - அவ்வாறன்றி இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக ஏற்றால் எமது வாழ்க்கை அமைதி நிறைந்ததாய் அமையும்.

(1) ஈ, ஆ, அ, இ, உ (2) உ, ஈ, இ, ஆ, அ
(3) இ, ஈ, அ, உ, ஆ (4) ஆ, உ, இ, அ, ஈ

### 2.1.3 வினாப்பத்திரம் I புள்ளி வழங்கும் திட்டம்

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | 3 | 21 | 4 |
| 02 | 4 | 22 | 1 |
| 03 | 4 | 23 | 3 |
| 04 | 1 | 24 | 1 |
| 05 | 2 | 25 | 1 |
| 06 | 3 | 26 | 4 |
| 07 | 1 | 27 | 3 |
| 08 | 2 | 28 | 2 |
| 09 | 4 | 29 | 3 |
| 10 | 3 | 30 | 4 |
| 11 | 1 | 31 | 2 |
| 12 | 2 | 32 | 4 |
| 13 | 1 | 33 | 2 |
| 14 | 4 | 34 | 4 |
| 15 | 3 | 35 | 2 |
| 16 | 2 | 36 | 1 |
| 17 | 3 | 37 | 3 |
| 18 | 1 | 38 | 2 |
| 19 | 4 | 39 | 4 |
| 20 | 3 | 40 | 1 |

**ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் (1 x 40) = 40 புள்ளிகள்**

## 2.1.4 வினாப்பத்திரம் 1 இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும்



## வரைபு 1 இலிருந்து பெறப்பட்ட தகவல்கள்

| வினா இல. | தொனிப்பொருள் | இலகுதன்மை கூடிய வினாவும் அதன் இலகுத்தன்மையும் | இலகுதன்மை குறைந்த வினாவும் அதன் இலகுத்தன்மையும் |
|---|---|---|---|
| 1 - 20 | மொழி வளத்தைக் கணிப்பிடல் | 4 (72%) | 14 (27%) |
| 21 - 30 | இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 25 (51%) | 29 (23%) |
| 31 - 40 | கிரகித்தல், நடைமுறைப் பயன்பாட்டுச் சொற்கள், பந்தியாக்கம் | 40 (67%) | 36 (10%) |

- வினாப்பத்திரம் I மாணவர்களுக்கு பொருத்தமானதாக அமைந்திருந்தது.
- 40 வினாக்களில் 26 வினாக்களுக்கு, 40% இற்கு மேலான மாணவர்கள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

**வினாத்தாள் I இல் குறைந்த இலகுத்தன்மையைக் கொண்ட வினாக்களும் அவற்றிற்கு சரியாக விடையளித்தோரின் வீதமும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.**

| தொனிப் பொருள் | வினா இல | சரியான விடையைத் தெரிவு செய்தோர் வீதம் | தொனிப்பொருளுக்கேற்ப வினாக்களின் இலகுத்தன்மை |
|---|---|---|---|
| மொழி வளம் | 05 | 34% | 34% |
| | 06 | 38% | |
| | 09 | 38% | |
| | 11 | 31% | |
| | 14 | 27% | |
| இலக்கணப் பயன்பாட்டுத் திறன் | 22 | 28% | 27% |
| | 24 | 32% | |
| | 27 | 36% | |
| | 28 | 29% | |
| | 29 | 23% | |
| | 30 | 30% | |
| கிரகித்தல், நடைமுறைப் பயன்பாட்டுச் சொற்கள், பந்தியாக்கம் | 31 | 34% | 34% |
| | 34 | 25% | |
| | 36 | 10% | |

**மொழிவளம் (வினா இல 01 - 20)**

**அவதானிக்கப்பட்டவை**

- 1-20 வரையான வினாக்களில் 05, 06, 09, 11,14 ஆகிய ஐந்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்வதில் மாணவர்கள் இடர்பட்டுள்ளனர்.
- மொழிவளத்தைக் கணிப்பிடும் 01-20 வரையான வினாக்களில் 4ஆம் வினாவிற்கு 72% ஆனோர் சரியாக விடையளித்துள்ளனர்.
- வினா இலக்கம் 14 இற்கு 27% ஆனோர் மாத்திரமே சரியாக விடையளித்துள்ளனர். இதன் மூலம் மாணவர்களது மொழிவள விருத்தி போதிய மட்டத்தை எட்டவில்லை என்பது புலனாகின்றது.

**ஆலோசனைகள்**

**வினா இல 05 இற்குரியது**

- இலக்கியத் தொகுப்பிலுள்ள பாடப்பரப்புகளில் பயன்படுத்தப்பட்ட சொற்களை / சொற்றொடர்களை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தல்
- வினா 05 இல் கொடுக்கப்பட்டுள்ள விடயம்போல் ஏனைய பாடப்பரப்புகளில் காணப்படுகின்ற விடயங்களை தேடித் தொகுக்க வழிப்படுத்துதல்.

**வினா இல 06 இற்குரியது**

- ஆங்கிலத்தில் நடைமுறையில் பயன்படுத்தப்படும் சொற்களுக்கான தமிழ்க் கலைச்சொற்களை இனங்காண்பதற்குப் பயிற்சிகள் வழங்குதல்.
- மாணவர்களைக் கலைச்சொற்களைத் தேடித் தொகுக்க வழிப்படுத்தல்.

**வினா இலக்கம் 11 இற்குரியது**

- வினா எதிர்மறையாகக் கேட்கப்பட்டுள்ளது. மாணவர்கள் இதனை அவதானிக்காமல் விடையளித்துள்ளனர். வினாக்களை முழுமையாக வாசித்துக் கிரகித்து விடையளிக்க நெறிப்படுத்தல்.

**வினா இலக்கம் 14 இற்குரியது**

- தொடர்மொழிக்கு ஒரு சொல் பற்றிய விடயங்களைத் தேடித்தொகுக்க வழிப்படுத்தல்.
- சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்கான பயிற்சியை வழங்குதல் (அகராதிப் பயன்பாடு, அருஞ்சொற்களுக்கான பொருள் கூறுதல்)

**இலக்கணப் பயன்பாட்டுத்திறன் (வினா இல 21-30)**

**அவதானிக்கப்பட்டவையும் ஆலோசனைகளும்:-**

- மூன்று தொனிப் பொருள்களிலும் இதற்குரிய இலகுதன்மையே (34%) குறைவாக உள்ளது என்பது கவனித்தற்பாலது.
- இலக்கணப்பயன்பாட்டுத்திறனைக் கணிப்பிடும் 21-30 வரையான வினாக்களில் வினா இலக்கம் 22, 24, 27, 28, 29, 30 ஆகிய வினாக்களுக்கு 40 சதவீதத்திற்கும் குறைவான பரீட்சார்த்திகளே சரியான விடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இவை

    22. பதவியல்
    24. வேற்றுமை
    27. பெயர்ச்சொற்கள்
    28. அகராதிப் பயன்பாடு
    29. சொற்களின் வகைகள்
    30. தொகைநிலைத் தொடர்

  எனும் பகுதிகளுக்குள் அடங்குகின்றபோதும், பொதுவாக இலக்கண வினாக்களுக்குச் சரியான விடை அளிப்பதில் மாணவர்கள் இடர்பட்டுள்ளமை தெளிவாகின்றது. எனவே இலக்கணப் பகுதிகளை மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் பயிற்சிகள் வழங்குதல் உகந்தது.
- போதியளவு இலக்கண வினாக்களை ஆசிரியர் தயாரித்துக் கொடுப்பதன் மூலம் மேலதிக பயிற்சிகளை வழங்கலாம்.
- கற்றல், கற்பித்தல் மதிப்பீட்டின் போது பிரயோக இலக்கணத்திற்கு முக்கியம் அளித்தல் பயனுடையதாகும்.
- இலக்கியப்பகுதிகளுக்கூடாக இலக்கணத்தைக் கற்பித்தல் சிறந்தது.

**கிரகித்தல், மொழியமைப்பு, பந்தியாக்கம் (வினா இல 31 - 40)**

**அவதானிக்கப்பட்டவையும் விருத்தி செய்வதற்கான ஆலோசனைகளும்**

- 31,34,36, ஆகிய வினாக்களுக்கு கணிசமான அளவு பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தேர்ந்தெடுப்பதில் இடர்பட்டுள்ளனர். வினா இல- 36 பரீட்சார்த்திகளுக்கு மிகவும் கடினத்தன்மையாக இருந்திருக்கின்றது. 10%மான பரீட்சார்த்திகளே இவ்வினாவுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

- மாணவர்களிடையே நடைமுறை மொழிப் பயன்பாட்டை ஊக்குவித்தல் வேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலானவற்றை வாசிக்கத் தூண்டுதல் நல்லது.

- வழுநிலை, வழாநிலை, வழுவமைதி என்பவற்றைப் பரீட்சார்த்திகள் தெளிவாகத் தெரிந்து பிரயோகிக்கும் ஆற்றலை வளர்ப்பதற்கான வாய்ப்புக்களை வகுப்பறையில் வழங்க வேண்டும்.

2.1.5 **வினாப்பத்திரம் I இல் பல்தேர்வு வினாக்களுக்கு விடைகளைத் தெரிவுசெய்துள்ள விதம் (சதவீதத்தில்)**

| வினா இலக்கம் | சரியான தெரிவு | தெரிவு செய்யப்பட்ட தெரிவின் வீதம் | | | | விடுபட்டோர் |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | - |
| 1 | 3 | 12% | 6% | 79% | 3% | - |
| 2 | 4 | 5% | 3% | 4% | 88% | - |
| 3 | 4 | 3% | 11% | 7% | 79% | - |
| 4 | 1 | 95% | 1% | 1% | 3% | - |
| 5 | 2 | 14% | 44% | 23% | 19% | - |
| 6 | 3 | 17% | 21% | 50% | 12% | - |
| 7 | 1 | 51% | 27% | 9% | 13% | - |
| 8 | 2 | 13% | 55% | 19% | 13% | - |
| 9 | 4 | 6% | 15% | 29% | 50% | - |
| 10 | 3 | 2% | 4% | 91% | 3% | - |
| 11 | 1 | 41% | 14% | 17% | 28% | - |
| 12 | 2 | 3% | 78% | 12% | 7% | - |
| 13 | 1 | 74% | 14% | 4% | 8% | - |
| 14 | 4 | 21% | 23% | 20% | 36% | - |
| 15 | 3 | 3% | 21% | 60% | 16% | - |
| 16 | 2 | 5% | 80% | 7% | 8% | - |
| 17 | 3 | 17% | 6% | 69% | 8% | - |
| 18 | 1 | 76% | 8% | 12% | 4% | - |
| 19 | 4 | 8% | 6% | 3% | 83% | - |
| 20 | 3 | 27% | 3% | 66% | 4% | - |
| 21 | 4 | 7% | 25% | 13% | 55% | - |
| 22 | 1 | 37% | 28% | 16% | 19% | - |
| 23 | 3 | 9% | 13% | 65% | 13% | - |
| 24 | 1 | 42% | 24% | 19% | 15% | - |
| 25 | 1 | 68% | 7% | 13% | 12% | - |
| 26 | 4 | 17% | 16% | 11% | 56% | - |
| 27 | 3 | 15% | 25% | 49% | 11% | - |
| 28 | 2 | 16% | 39% | 23% | 22% | - |
| 29 | 3 | 8% | 50% | 31% | 11% | - |
| 30 | 4 | 33% | 15% | 11% | 41% | - |
| 31 | 2 | 16% | 46% | 22% | 16% | - |
| 32 | 4 | 14% | 5% | 6% | 75% | - |
| 33 | 2 | 15% | 67% | 9% | 9% | - |
| 34 | 4 | 39% | 13% | 15% | 33% | - |
| 35 | 2 | 23% | 59% | 14% | 4% | - |
| 36 | 1 | 14% | 21% | 3% | 62% | - |
| 37 | 3 | 8% | 4% | 82% | 6% | - |
| 38 | 2 | 19% | 64% | 13% | 4% | - |
| 39 | 4 | 17% | 19% | 5% | 59% | - |
| 40 | 1 | 90% | 3% | 2% | 5% | - |

ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்த மாணவர் சதவீதம் நிழற்றிக் காட்டப்பட்டுள்ளது.

விடுபட்டோர் என்பதால் காட்டப்படுவது வினாவிற்கு தெரிவுகளை மேற்கொள்ளாத அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளை மேற்கொண்ட பரீட்சார்த்திகளினது சதவீதம் ஆகும்.

**வினா இலக்கம். 04**

95% மானோர் சரியான விடையினைத் தெரிவு செய்துள்ளமையால் இது இலகுதன்மை கூடிய வினா எனக் கருதலாம்.

**வினா இலக்கம். 06**

50% மான பரீட்சார்த்திகளே சரியான விடை 3 இனைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவில் சவால் மிக்க கவனக்கலைப்பான்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**வினா இலக்கம். 11**

41% மான பரீட்சார்த்திகள் சரியான விடையான 01 இனைத் தெரிவு செய்துள்ளனர். 59 சதவீதத்தினர் ஏனைய மூன்று விடைகளைத் தெரிவு செய்துள்ளனர். இதனையும் சவால்மிக்க கவனக்கலைப்பான்களை கொண்ட ஒரு வினாவாகக் கருதலாம்.

**வினா இலக்கம். 14**

சரியான விடையான 04 இனைத் தெரிவு செய்தோர் 36% சதவீதத்தினர் மட்டுமே. ஏனைய பரீட்சார்த்திகள் சொற்களின் பொருள்களை விளங்கிக் கொள்ளவில்லை என்பது புலனாகின்றது.

**வினா இலக்கம். 22**

சரியான விடையான 01 இனைத் தெரிவு செய்தோர் 37% ஆனவர்கள் மாத்திரமேயாகும். பகுபதம் - பகாப்பதம் என்பது பற்றிய பிரயோக அறிவு இல்லாமையை இது சுட்டுகிறது.

**வினா இலக்கம். 24**

சரியான விடை 01 இனைத் தெரிவு செய்தோர் 42 சதவீதத்தினர் மட்டுமே. 'ஓடு' என்ற வேற்றுமையுருபையும் அடைமொழிப் பொருளில் அது வருமாற்றையும் வேறுபடுத்தத் தெரியாமையை இது புலப்படுத்துகின்றது.

**வினா இலக்கம். 28**

சரியான விடையான 02 இனைத் தெரிவு செய்தோர் 39 சதவீதத்தினர் மட்டுமே. அகராதி ஒழுங்கில் அமைந்த தொகுதிகளையே அதிகமானோர் தெரிவு செய்துள்ளமை கவனத்திற்பாலது.

**வினா இலக்கம். 29**

சரியான விடையான 03 இனைத் தெரிவு செய்தோர் 31 சதவீதத்தினர் மட்டுமே. பிழையான விடையான 02 இனைத் தெரிவு செய்தோர் 50 சதவீதத்தினர் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். 'இல்லை' பொதுவினை என்பதையும் 'விழுந்து' என்பது வினையெச்சம் என்பதையும் பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளத் தவறியுள்ளனர்.

**வினா இலக்கம். 30**

சரியான விடையான 04 இனை 41 சதவீதத்தினரே தெரிவு செய்துள்ளனர். 'பழப்பாக்கு' என்பது தனிச் சொல் என்பதை பரீட்சார்த்திகள் கவனத்திற் கொள்ளவில்லை.

**வினா இலக்கம். 34**

சரியான விடையான 04 இனைத் தெரிவு செய்தோர் 33 சதவீதத்தினர் மட்டுமே. அதேவேளை பிழை யான விடையான 01 இனை 39 சதவீதத்தினர் தெரிவு செய்துள்ளனர்.

**வினா இலக்கம். 40**

சரியான விடையான 01 இனை 90 சதவீதமானோர் தெரிவு செய்துள்ளனர். இலகுதன்மை கூடிய வினாவாக இதனைக் கருதலாம்.

# தமிழ்மொழியும் இலக்கியமும் - II

## 2.2 வினாப்பத்திரம் II உம் அதற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

### 2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

நேரம் :- **2** மணித்தியாலங்கள் மொத்தப் புள்ளிகள் **80**

- இவ்வினாப்பத்திரம் 5 வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1. குறுவிடை வினாக்கள் 10. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்
2. கட்டுரை எழுதுதல் - வழிகாட்டற் குறிப்புகளுடனான **நான்கு** கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும் - 25 புள்ளிகள்
3. சுருக்கம் எழுதுதல் - 10 புள்ளிகள்
4. கிரகித்தல் தொடர்பான வினாக்கள் - 10 புள்ளிகள்
5. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் - 15 புள்ளிகள்

**வினாப்பத்திரம் II இற்கான மொத்தப் புள்ளிகள்** = 20+25+10+10+15
= 80 **புள்ளிகள்**

## 2.2.2. வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

**வினா இல. 1**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(i) பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
'மெலிந்தப் பிறைக்கும் விழி'

(ii) "புத்தகத்தை எடுத்துட்டு வூட்ட வா மனே" என்ற பேச்சு வழக்கு வாக்கியத்தை எழுத்து வழக்குக்கு மாற்றி எழுதுக.

(iii) 'எழுவான் திசையை யாரேனும் சுட்டுவீராயின்...' இங்கு 'எழுவான் திசை' என்பது எத்திசையைக் குறிக்கிறது ?

(iv) 'வேட்டைநாய் போல அவள் முன்னே ஓடிச் செல்கிறது நிழல்.' இதில் பயின்றுள்ள அணி யாது ?

(v) 'ஒற்றைக்காலில் நிற்றல்' என்ற மரபுத்தொடர் குறிக்கும் பொருள் யாது ?

(vi) அப்பால் மூழ்கிற்று கதிர் நெடுங்கடலுள். - இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலையினை எடுத்துக்காட்டுக.

(vii) பின்வரும் வாக்கியத்துக்கு மிகப்பொருத்தமான நிறுத்தக் குறியினையிட்டு அதனை மீண்டும் எழுதுக.
'ஆகா மலையிலே வழிந்தோடும் நீரருவியின் அழகுதான் என்னே'

(viii) பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரே வாக்கியமாக்குக.
(அ) நான் கொழும்புக்குப் போனேன்.
(ஆ) நீ கொழும்புக்குப் போனாய்.

(ix) தரப்பட்ட கூட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துக.
பிரதம விருந்தினர் உரை, நன்றியுரை, தமிழ் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை

(x) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவை நீக்கி வாக்கியத்தைச் செம்மையாக மீண்டும் எழுதுக.
கல்வி, செல்வம், வீரம், ஒழுக்கம் முதலானவை வாழ்க்கைக்கு முக்கியமானது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். (20 புள்ளிகள்)

**1 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்**

**வினா இல. 1**

(i) மெலிந்து அப்பு இறைக்கும் வழி
மெலிந்து + அப்பு + இறைக்கும் வழி

(ii) புத்தகத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு / வீட்டுக்கு வா மகனே

(iii) கிழக்குத்திசை.'. குணதிசை / கீழ்த்திசை

(iv) உவமையணி

(v) விடாப்பிடியாக நிற்றல் / பிடிவாதம் பிடித்தல்

(vi) எழுவாய் - கதிர்
பயனிலை - மூழ்கிற்று

(vii) "ஆகா!மலையிலே வழிந்தோடும் நீராவியின் அழகுதான் என்னே!"

(viii) நானும் நீயும் / நீயும் நானும் கொழும்புக்குப் போனோம்.

(ix) தமிழ்வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை, பிரதம விருந்தினர் உரை, நன்றியுரை.

(x) கல்வி, செல்வம், வீரம், ஒழுக்கம் முதலானவை வாழ்க்கைக்கு முக்கியமானவை என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

(2 × 10 = 20 புள்ளிகள்)

**1ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

**1ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




1 ஆம் வினா கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாவாகும். 99% ஆனவர்கள் இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர்.

இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

16 - 20 வரையான புள்ளி வீச்சில் 12% ஆனோரும்
11 - 15 வரையான புள்ளி வீச்சில் 39% ஆனோரும்
06 - 10 வரையான புள்ளி வீச்சில் 33% ஆனோரும்
00 - 05 வரையான புள்ளி வீச்சில் 16% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 12% ஆனோர் 16 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 16% ஆனோர் 5 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**1ஆம் வினாவின் பிரிவுகளுக்கும் உபபிரிவுகளுக்குமான இலகுதன்மை**




வினாப்பத்திரம் II இல் குறு வினாக்களைக் கொண்ட 1 ஆம் வினாவில் iv, viii- ஆகிய வினாக்கள் இலகுதன்மை வாய்ந்தனவாக அமைந்துள்ளன.

வினா (i) இற்கு குறைவானவர்களே சரியாக விடையளித்துள்ளனர். இவ் வினா இலகுதன்மை குறைந்ததாகக் காணப்படுகின்றது.

**1ஆம் வினாவிற்கு விடையளித்துள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்.**

- முதலாம் வினாவில் குறுவினாக்கள் 10 உள்ளன.
  i, ix, x ஆகிய வினாக்களுக்கு சரியாக விடையளித்தோர் முறையே 12%, 37%, 30% ஆவர்.

**பரீட்சார்த்திகள் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பதில் இடர்பட்டுள்ளனர்.**

- வினா - i சந்தி பிரித்து எழுதுதல் :-
  தொடரில் உள்ள சொற்களின் பொருளறிந்து பதம் பிரித்து எழுதுதல்.

- வினா ix நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்தி எழுதுதல்.

- வினா x வாக்கிய வழுவை இனங்கண்டு திருத்தி எழுதுதல்.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :-**

- தொடரில் உள்ள சொற்களின் பொருள் விளங்க பதம்பிரித்து எழுத நெறிப்படுத்தல்.

- செய்யுட் பகுதிகளைக் கற்பிக்கும் போது தொடர்களைப் பதம்பிரித்துக் காட்டுதல்.

- பொருத்தமான இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைப்பதற்கு பயிற்சி வழங்குதல்.

- தனிவாக்கியங்களை இணைத்து கூட்டு வாக்கியமாக எழுதுவதற்கு பயிற்சிகள் வழங்குதல்.
  உ+ம் : முற்றுவினைகளை எச்சவினைகளாக்கியும் இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தியும் தனிவாக்கியங்களை கூட்டுவாக்கியமாக்கி எழுதச் செய்தல்.

- கூட்டுவாக்கியங்களைக் கொடுத்து தனிவாக்கியங்களாக்குதல்.

- வாக்கியங்களில் நிறுத்தக் குறிகள் பயன்படுத்தும் இடங்களை இனங்காணச் செய்தலும் அவற்றைப் பொருத்தமாக பயன்படுத்துதலும்.

- வழுநிலை, வழாநிலை, வழுவமைதி என்பவற்றை இனங்காணச் செய்தல்.

- வழுநிலை வாக்கியங்களைச் செம்மையாக எழுதப் பயிற்சிகள் வழங்குதல்.

- வகுப்பறைகளில் பல்வேறுபட்ட கூட்டங்கள், விழாக்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்குதல்.

**வினா இல. 2**

பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) இன்று நமது நாட்டில் குப்பைகளை அகற்றுதல் பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நமது நாட்டில் அவற்றை அகற்றுவதற்கான வழிமுறைகளைச் சரியான வகையில் நடைமுறைப்படுத்தாத காரணத்தால் நாம் பாரிய அனர்த்தங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே அவற்றைச் சரியான விதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பான ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) 'ஆசிரியத்தொழில்' புனிதமானது. நமது அறிவுக்கண்களைத் திறப்பவர்களாகவும் நமது வளர்ச்சிக்கு ஏணிப்படிகளாகவும் ஆசிரியர்கள் விளங்குகின்றார்கள். ஆசிரியர்கள் தெய்வத்துக்குச் சமமானவர்கள். அவர்களை நாம் மதிக்க வேண்டும். அவர்களது சேவைகளைப் பாராட்ட வேண்டும் என்ற பொருள்பட ஆசிரியர் தின விழாவில் நிகழ்த்தப்படும் ஒரு **மேடைப்பேச்சு.**

(iii) உல்லாசப் பயணிகளின் வருகையால் நாட்டின் வருமானம் அதிகரித்து நாடு முன்னேற்றமடையும் எனக் கருதும் ஒருவருக்கும், நாட்டின் பண்பாடு சீரழிவதுடன் போதைப்பொருள் பாவனை, நோய்த் தொற்றுகள் ஆகியன ஏற்பட்டு நாடு பாதிப்படையும் எனக் கருதும் மற்றொருவருக்குமிடையிலான ஓர் **உரையாடல்.**

(iv) 'இன்று அவளுக்குப் பாராட்டுவிழா... அவள் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் முதலிடம் பெற்றமைக்காக இந்த விழா நடைபெறுகிறது. ஆனால் இந்த நிலையை அடைவதற்காக அந்தச் சிறுமி பட்ட பாடுகள் சொல்லிலடங்கா...' என்ற கருப்பொருளிலமைந்த ஒரு **சிறுகதை.**

(25 புள்ளிகள்)

2 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(i) விளக்கக் கட்டுரை

தலைப்பு : **குப்பைகளை முறையாக அகற்றுவதற்கான வழிமுறைகள் / குப்பைகளை முறையாக அகற்றுவதன் அவசியம் / கழிவகற்றல் முகாமைத்துவத்தின் அவசியம். (இவை போன்ற தலைப்புகள்)**

- வீடு, தொழிற்சாலை முதலியவற்றின் கழிவுகள் பல வகைப்பட்டனவாகச் சேர்கின்றன.
- மிதமிஞ்சிய கழிவுகள் சேகரிக்கப்பட்டு ஓரிடத்தில் குவிக்கப்படுகின்றமையும் அவற்றை அகற்றுவதற்கு போதிய நடைமுறைகள் பின்பற்றப்படாமையும்.
- இதனால் நோய் பரவுதல், உயிரிழப்புக்கள் முதலிய அபாயகரமான நிலைமைகள் உருவாகின்றன.
- இப்பிரச்சினையைப் போக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்
  - முறையான கழிவகற்றல் நடவடிக்ககைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டுதல்.
  - உக்கக்கூடிய கழிவுகளைப் பசளையாக்குதல்.
  - உக்காதவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்
  - எரிக்கக் கூடியவற்றை எரித்து அழித்தல்.

இத்தகைய நடவடிக்கைகளை உள்ளூராட்சி நிறுவனங்கள் முறையான திட்டங்களின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்படுத்துதல்.

**(ii) மேடைப்பேச்சு**

**தலைப்பு : ஆசிரியத் தொழிலின் புனிதத்துவம் / ஆசிரியர்களைப் போற்றிப் பாராட்டுவோம் /ஆசிரியத் தொழில் மேன்மைக்குரியது. (இவை போன்ற தலைப்புக்கள்)**

- அவதானிப்புக்குரியவை
  - சபையோரை விளித்தல், வணக்கம் கூறுதல்.
  - பேசப்போகும் தலைப்பைத் தொடர்புபடுத்திப் பேசுதல்.

- உள்ளடங்க வேண்டியவை
  - ஆசிரியர் தின விழாவின் முக்கியத்துவம்.
  - உலகில் பல வகையான தொழில் முறைகள் காணப்பட்டாலும் ஆசிரியத் தொழிலுக்கு ஈடில்லை. அது புனிதமான தொழில்.
  - அவர்கள் எமக்கு அறிவொளியூட்டுபவர்கள்.
  - மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவுபவர்கள்.
  - அவர்கள் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள்.
  - அவர்களை நாம் இன்று மட்டுமல்ல என்றும் மதிக்க வேண்டும்.
  - சுயநலமற்ற அவர்களது சேவை பாராட்டுக்குரியது.
  - நாம் சமூகத்திற்குப் பயனுடையவர்களாக வாழ்வதே அவர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.
  - முக்கியமான இத்தினத்தில் ஆசிரியர்களை வாழ்த்தி முடிப்பதாக அமைதல்.

**(iii) உரையாடல்**

**தலைப்பு : உல்லாசப் பயணிகளின் வருகையால் உண்டாகும் சாதக பாதகங்கள் / உல்லாசப் பயணிகளின் வருகையின் விளைவுகள். (இவை போன்ற தலைப்புக்கள்)**

- உரையாடலில் இருவர் பங்குபற்றுதல்.
- உரையாடல் அமைப்பு இருத்தல் வேண்டும்.
- ஒருவர் கருத்தை இன்னொருவர் உள்வாங்கித் தர்க்க ரீதியாக உரையாடல் இருத்தல் வேண்டும்.

உல்லாசப் பயணிகளின் வருகையால் உண்டாகும் சாதக பாதகங்கள்.

**சாதகங்கள்**

- அன்னியச் செலாவணி அதிகரித்த அளவில் கிடைத்தல்.
- உல்லாசப் பயணிகளைக் கவரும் இடங்களும் அவற்றோடு சேர்ந்த பிரதேசங்களும் அபிவிருத்தி செய்யப்படுதல்.
- வேலை வாய்ப்புக்கள் பெருகுதல்.
- நாடு பற்றிய அபிமானம் வேறு நாடுகளிலும் பரவுதல்.

**பாதகங்கள்**

- பிறநாட்டார் பண்பாட்டின் ஊடுருவலால் சுதேசப் பண்பாடு சீரழிதல்.
- போதைப் பொருள் பாவனை அதிகரித்தல்.
- பாலியல் துஷ்பிரயோகம்
- நோய் பரவுதல்.

(iv) **சிறுகதை**

**தலைப்பு : முயற்சி வெற்றி தரும், புயலைத் தாங்கிய புஸ்பம், வலிகளைத் தாண்டி.......**
**(இவை போன்ற தலைப்புக்கள்)**

- சிறுகதைகளுக்குரிய அமைப்புப் பேணப்படல்.
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்.
- கதையை சுவை படவும் விறுவிறுப்பாகவும் நகர்த்திச் செல்லுதல்.
- இயல்பான, கவர்ச்சியான கதையோட்டம்.
- கதைக்குப் பொருத்தமான மொழிநடை
- இயல்பான பாத்திர உரையாடல்.
- படிப்பினையை மறைமுகமாக வெளியிடல்.
- முடிவு பொருத்தமாக அமைதல். **(25 புள்ளிகள்)**

**2ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




2ஆம் வினா கட்டாயம் தெரிவு செய்யப்பட வேண்டிய வினாவாக அமைந்தாலும் 99% ஆனவர்களே இவ்வினாவுக்கு விடையளித்துள்ளனர்.

இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும்.

19 - 25 வரையான புள்ளி வீச்சில் 30% ஆனோரும்
13 - 18 வரையான புள்ளி வீச்சில் 47% ஆனோரும்
07 - 12 வரையான புள்ளி வீச்சில் 16% ஆனோரும்
00 - 06 வரையான புள்ளி வீச்சில் 7% ஆனோரும்
இடம் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 30% ஆனோர் 19 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கும் அதேவேளை 7% ஆனோர் 6 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இல் 2ஆம் வினாவான கட்டுரை வினா கட்டாயமானதாகும். இவ்வினாவின் இலகுதன்மை 75% ஆகும்.

**2ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

- கட்டுரை வினாவில் விளக்கக்கட்டுரையை அதிகமானோர் தெரிவு செய்துள்ளனர்.
- மேடைப்பேச்சினை 10% ஆனவர்களும், உரையாடலை 6% ஆனவர்களும் சிறுகதையை 8% ஆனவர்களும் தெரிவு செய்து எழுதி உள்ளனர்.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கொடுக்கப்பட்ட வழிகாட்டல் குறிப்புகளை அவதானித்து கட்டுரை எழுதப்படாமை.
- தலைப்புகள் அதிக சொற்களில் எழுதப்பட்டிருந்தமை.
- மொழிச் செம்மை திருப்திகரமாக அமையாமை.
- எழுத்துப்பிழை, வாக்கியவழு காணப்பட்டமை.
- நிறுத்தக்குறிகள் பொருத்தமாக பயன்படுத்தப்படாமை.
- கட்டுரை அமைப்பு முழுமையாக பேணப்படாமை.
    - பந்திகள் ஆரம்பிக்கும் முறை ஒழுங்கற்றுக் காணப்பட்டமை.
    - பந்திகளுக்கிடையே தொடர்பின்மை காணப்பட்டமை.
- உரையாடலைத் தெரிவுசெய்தோரின் கட்டுரைகளில் பொருட் பொருத்தமின்மை காணப்பட்டமை.
- சிறுகதை ஆக்கங்களில் கற்பனை வளம் போதாமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- வழிகாட்டற் குறிப்புகளை வாசித்து விளங்கிக் கொண்டு அவற்றுக்கு ஏற்றவாறு கட்டுரைகளை எழுத வழிப்படுத்தல்.
- பாடநூல்களில் இடம்பெறும் கட்டுரைகள், சிறுகதைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, கட்டுரைகள், சிறுகதைகள் எழுதுவதற்கு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.
- சட்டகம் அமைத்துக் கட்டுரை எழுதும் பயிற்சிகளை வழங்குதல்.
- ஒரு விடயம் பற்றி ஒரு பந்தியில் விரித்து எழுதப் பழக்குதல்.
- பந்திகளை அமைக்கும் போது பந்திகளுக்கிடையில் தொடர்ச்சி பேணப்படுவதை கவனத்தில் கொள்ளச் செய்தல்.
- தலைப்பு சுருக்கமாகவும் கவர்ச்சியாகவும் எழுதுவதற்கு பயிற்சிகள் வழங்குதல்.
- இலக்கணப் பிழைகளைத் தவிர்ப்பதற்காக நீண்ட வசனங்கள் எழுதுவதை தவிர்த்துக்கொள்ள வழிகாட்டுதல்
- கட்டுரை எழுதுவதற்கான பயிற்சிகள் அதிகம் வழங்குதல்.
- மாணவர்கள் எழுதிய கட்டுரைகளைத் திருத்துவதுடன் அவற்றின் குறைநிறைகளை வகுப்பறையில் கலந்துரையாடல்.
- சிறுகதைகளை வாசிப்பதனூடாக மாணவர்களின் கற்பனை வளத்தை அதிகரிப்பதற்கான பயிற்சிகளை வழங்குதல்

வினா இல. 3

**3.** பின்வரும் உரைப்பகுதியின் **சுருக்கத்தை 40 - 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.
(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

சிலப்பதிகாரம் என்பது தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். காவிரிப்பூம்பட்டினத்திலே பெருங்குடி வணிகர் குலத்தில் பிறந்த கற்புக்கரசி கண்ணகி, அவள் கணவன் கோவலன் என்பவர்களுடைய வரலாற்றை உரைப்பது. முத்தமிழ்ப் புலமையும் கவித்திறனும் வாய்ந்த இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. படிப்பவர் மனதைக் கவரும் சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்தது. புகழ்மிக்க மூவேந்தர்களுடைய குளிர்ந்த சோலை என்று கருதப்படும் தமிழகத்தின் பகுதிகளாகிய சேர, சோழ, பாண்டிய நாட்டின் இயல்புகளையும் முறையே அவற்றின் தலைநகரங்களாகிய வஞ்சி, பூம்புகார், மதுரை என்பவற்றின் பெருமைகளையும் எடுத்துரைப்பது. அந்த நகரங்களிலிருந்து நல்லாட்சி புரிந்த சேர, சோழ பாண்டிய மன்னர்களின் தருமம், வீரம், அரசியல் முறைமை முதலியவற்றையும் அவர்களது ஆட்சியில் வாழ்ந்த மக்களின் ஒழுக்கம், ஊக்கம் ஆகியவற்றையும் நன்கு புலப்படுத்துவது. மற்றும் அக்கால உழவுத்தொழில், வணிகம், கைத்தொழிற் பெருக்கம், அரசியல், கல்வி, சமயநிலை முதலானவற்றையும் அறிவதற்குச் சான்றாக உள்ளது. அரசியலில் தவறுவிடும் மன்னர்களை அறம் என்ற கடவுள் தண்டிப்பார், கற்பிற் சிறந்து விளங்கும் பெண்களை அனைவரும் போற்றுவர், ஒருவர் ஒரு பிறவியில் செய்த வினைகள் அவரது பிறவிகள் தோறும் தொடரும் ஆகிய மூன்று பெரும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதனை இயல், இசை, நாடகக் காப்பியம் எனவும் உரையும் செய்யுளும் கலந்த உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் கூத்தும் பாட்டும் இடையிடை அமைந்த நாடகக் காப்பியம் எனவும் கூறுவர். (10 புள்ளிகள்)

**3ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

**சுருக்கம் எழுதுதல்**

**கவனிக்க வேண்டியவை**

- பிரதான கருத்து, துணைக் கருத்துக்கள்.
- சொந்த மொழி நடையில் எழுதுதல்.
- ஒரு பந்தியாக எழுதுதல்.
- கட்டுக் கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்.
- பிரதான அம்சங்களை அனுசரித்தல்.
- தவிர்க்க வேண்டியன தவிர்க்கப்படல். (கூறியது கூறல், உதாரணங்கள் முதலானவை)
- தொகை மொழிச் சொற்களைப் பயன்படுத்தல்.
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படல்.
- குறித்த சொல்லளவில் எழுதுதல்.

| | | |
|---|---|---|
| விடய உள்ளடக்கம் | - | 06 புள்ளிகள் |
| சொல்லளவு | - | 02 புள்ளிகள் |
| மொழிநடை | - | 02 புள்ளிகள் |

- 40 - 45 சொற்களுக்குள் இருத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- 35 - 50 சொற்கள் வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
- 35 சொற்களுக்குக் குறைவாகவோ 50 சொற்களுக்குக் கூடுதலாகவோ இருந்தால் சொல்லளவிற்கான ஒரு புள்ளியைக் குறைக்கவும்.
- சொல்லளவு 50 ற்கு மேற்படின் 50 சொற்களை எல்லையாகக் கொண்டு அதற்குள் எழுதப்பட்ட விடயங்களை அனுசரித்துப் புள்ளிகளை வழங்கவும்.
- சொல்லளவு 35 ற்கு குறைவாக இருப்பின் பிரதான கருத்தின் சாராம்சங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.
- சொற்களை எண்ணும் போது நிதானமாகக் கணக்கிடவும்.

**3ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்கு 99% ஆனவர்கள் விடையளித்துள்ளனர்.

இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08 - 10 வரையான புள்ளி வீச்சில் 45% ஆனோரும்
06 - 07 வரையான புள்ளி வீச்சில் 37% ஆனோரும்
03 - 05 வரையான புள்ளி வீச்சில் 14% ஆனோரும்
00 - 02 வரையான புள்ளி வீச்சில் 04% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 7 இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 45% ஆக இருக்கும் அதேவேளை 4% ஆனோர் 3 இற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இன் 3ஆம் வினா சுருக்கம் எழுதுதல் ஆகும். இவ்வினாவின் இலகுதன்மை 71%ஆக உள்ளது.

**வினா இலக்கம் - 03 சுருக்கம் எழுதுதல்**

**இவ்வினாவின் இலகுதன்மை 71% ஆகக் காணப்படுகின்றது. மேலும் இச்சதவீதத்தினைக் கூட்டுவதற்கு பின்வரும் ஆலோசனைகளைக் கருத்திற் கொள்ளலாம்.**

- சுருக்கத்தை முழுமையாக வாசித்து மையக் கருத்தை இனங்காணல்.
- மையக்கருத்தை வலியுறுத்தும் துணைக்கருத்துக்களை இனங்கண்டு குறிப்பெடுத்தல்.
- எடுத்துக்கொண்ட குறிப்புக்களை தொகுத்து எழுதுதல்.
- சொல்லளவை கவனத்திற்கொள்ளல்.
- சொந்த மொழிநடையில் எழுதுவதைக் கருத்திற்கொள்ளுதல்.
- மாதிரிச் சுருக்கம் ஒன்றை எழுதுவித்து பின்னர் இறுதிச் சுருக்கத்தை எழுதுதல், இவற்றைக் கருத்திற் கொண்டு சுருக்கம் எழுதுவதற்கு நெறிப்படுத்துதல் இன்றியமையாததாகும்.

**வினா இலக்கம் 4**

**4.** பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பேபைரஸ், தோல், பனையோலை ஆகிய பண்டைக் காலத்து எழுதுகருவிகளில் எழுதப்பட்ட எழுத்துக்கள் முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி முதலிய குறியீடுகளைக் கொண்டிருக்கவில்லை. அன்றியும் சொற்களைத் தனித்தனியே பிரித்தெழுதாமல் ஒரே கோவையாக எழுத்துக்கள் எழுதப்பட்டன. இவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளைப் படிப்பது கடினமாகவும் வருத்தமாகவும் இருந்தது. பழக்கப்பட்டவர்கள் மட்டுமே இவற்றைப் படிக்க முடியும். பழக்கப்பட்டவர்களுக்கும் தொடரைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. மேல்நாட்டார், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், சொற்களைப் பிரித்து எழுதத் தொடங்கினார்கள்; இன்னும் பிற்காலத்தில் புள்ளிகள் முதலிய குறியீடுகளை வழங்கினார்கள். நமது நாட்டு ஓலைச்சுவடிகளில் முற்றுப்புள்ளி முதலிய குறியீடுகள் அமைக்கப்படவில்லை.

(i) பண்டைக்காலத்தில் எழுதுகருவிகளாகப் பயன்பட்டவை யாவை ?

(ii) பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட சுவடிகளைப் படிப்பது கடினமானதாக இருந்தமைக்கான காரணங்கள் யாவை ?

(iii) எழுத்து வழக்கில் குறியீடுகளை முதன்முதலில் பயன்படுத்தியவர்கள் யார் ?

(iv) சுவடிகள் படிப்பதை இலகுவாக்க, முதலில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

(v) இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்தக் குறிகள் எவை ? (10 புள்ளிகள்)

## 4 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

i. பேபைரஸ், தோல், பனையோலை

ii.
- நிறுத்தக் குறியீடுகள் பயன்படுத்தப்படாமை.
- சந்தி பிரித்து எழுதாமை.

iii. மேல்நாட்டார்

iv. சொற்களைச் சந்தி பிரித்து எழுதத் தொடங்கியமை.

v. முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி. (02 x 05 = 10 புள்ளிகள்)

## 4 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




4ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்கு 99% ஆனவர்கள் விடையளித்துள்ளனர்.

இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08 - 10 வரையான புள்ளி வீச்சில் 76% ஆனோரும்
06 - 07 வரையான புள்ளி வீச்சில் 15% ஆனோரும்
03 - 05 வரையான புள்ளி வீச்சில் 6% ஆனோரும்
00 - 02 வரையான புள்ளி வீச்சில் 3% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 7 இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 76% ஆக இருக்கும் அதேவேளை 3% ஆனோர் 2 அல்லது அதற்கு குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




வினாப்பத்திரம் II இன் 4ஆம் வினா. கிரகித்தல் வினாவாகும். இவ்வினா ஐந்து பிரிவுகளைக் கொண்டது. 4- (iv) பகுதிக்கு 72% மான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர். ஏனைய வினாக்களுக்கு 80% இற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர்.

**வினா இலக்கம் - 04 கிரகித்தல் வினா (உரைநடைப்பகுதி)**

- நான்காம் வினா 5 பிரிவுகளைக் கொண்டது.
- புதிய பாடத்திட்டத்திற்கு அமைய கிரகித்தல் வினாக்களுக்கு உரைநடைப்பகுதி கொடுக்கப்பட்டமை பரீட்சார்த்திகள் அதிக புள்ளிகளைப் பெற வாய்ப்பாக அமைந்தது.
- பரீட்சார்த்திகளின் உள வயது மட்டத்திற்கு ஏற்ப பந்தி அமைந்து இருப்பதும் சாலப் பொருத்தமானதே.
- வகுப்பறையில் கிரகித்தல் பயிற்சிகளைத் தொடர்ந்தும் வழங்குதல் பொருத்தமானதாகும்.

வினா இல. 5

**5.** உமது பாடசாலையில் சுவாமி விபுலாநந்தரது 125 ஆவது ஜனன தின விழா கொண்டாடப்படவுள்ளது. உம்மை பாடசாலையின் தமிழ்மன்றச் செயலாளர் எனக் கருதிக்கொண்டு, விழா தொடர்பான விவரங்கள், கலைநிகழ்ச்சிகள் முதலியவற்றைக் குறிப்பிட்டு அவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தருமாறும் விபுலாநந்தரது இலக்கிய முயற்சிகள் பற்றி உரையாற்றுமாறும் கேட்டு, பல்கலைக்கழகமொன்றின் துணைவேந்தருக்கு **100** சொற்களில் ஓர் அழைப்புக் **கடிதம்** எழுதுக.

**அல்லது**

நாம் வாழும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், சுத்தமாக வைத்திருக்காவிடின் ஏற்படும் பாதகமான விளைவுகள், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசுடன் இணைந்து நாமும் பிற சமூக அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, **100** சொற்களில் ஒரு **துண்டுப்பிரசுரம்** எழுதுக. (15 புள்ளிகள்)

## 5 ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**கடிதம்**

| | | |
|---|---|---|
| - அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| - உள்ளடக்கம் | - | 07 புள்ளிகள் |
| - மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| மொத்தம் | - | 15 புள்ளிகள் |

**அமைப்பு**

| | | |
|---|---|---|
| - முகவரி | - | 01 புள்ளி |
| - உள்முகவரி | - | 01 புள்ளி |
| - விளிப்பு | - | 01 புள்ளி |
| - தலைப்பு | - | 01 புள்ளி |
| - பதவி, ஒப்பம் | - | 01 புள்ளி |

**உள்ளடக்கம்**

- சுவாமி விபுலாநந்தரது 125 ஆவது ஜனன தின விழா கொண்டாடப்படவுள்ளது எனக் குறிப்பிடல்.
- பிரதம விருந்தினராக வருகை தந்து விபுலாநந்தரது இலக்கிய முயற்சிகள் பற்றி உரையாற்றும் படி வினயமாக வேண்டல்.

**விழா தொடர்பான விடயங்கள்**

- பாடசாலையின் பெயர்
- திகதி
- நேரம்
- இடம்
- பங்குபற்றும் விருந்தினர் விபரம்.

**கலை நிகழ்ச்சிகள் பற்றிய விபரம்**

**மொழிநடை**

- பொருத்தமான மொழி நடை
- நிறுத்தக் குறிப்பிரயோகம்
- வழுக்கள் இன்மை
- சுட்டிப்பாகக் கூறுதல். (15 புள்ளிகள்)

**துண்டுப்பிரசுரம்**

| | | |
|---|---|---|
| - அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| - உள்ளடக்கம் | - | 07 புள்ளிகள் |
| - மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| மொத்தம் | - | 15 புள்ளிகள் |

**அமைப்பு**

| | | |
|---|---|---|
| - கவர்ச்சிகரமான தலைப்பு | - | 02 புள்ளிகள் |
| - விளிப்பு | - | 01 புள்ளி |
| - வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும் | - | 02 புள்ளிகள் |

**உள்ளடக்கம்**

- காற்று, நிலம், நீர் முதலானவற்றை மாசடையாமல் வைத்திருத்தல்.

**பாதக விளைவுகள்**

- நோய் ஏற்படல்.
- சுற்றாடலின் அழகு கெடல்

**கட்டுப்படுத்தல்**

- அரசாங்கத்துடன் இணைந்து கழிவு மீள் சுழற்சி முறையை மேற்கொள்ளல்.
- மாசடைதல் சம்பந்தமாக விழிப்புணர்வுச் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்.
- சிரமதானங்களை ஏற்பாடு செய்தல்.(வீடு, பாடசாலை, சுற்றாடல்)
- ஊடகங்களைப் பொருத்தமுறத் தொடர்புபடுத்தல்.

**மொழிநடை** - -

- கவர்ச்சியான மொழிநடை
- பொதுமக்களை விளித்து எழுதுதல்.
- சூழ்நிலையின் அபாயத்தை வெளிப்படுத்துதல்.
- சொற்செறிவு

(15 புள்ளிகள்)

### 5ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




5ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவுக்கு 98% ஆனவர்களே விடையளித்துள்ளனர்.

இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.

12 - 15 வரையான புள்ளி வீச்சில் 32% ஆனோரும்
08 - 11 வரையான புள்ளி வீச்சில் 42% ஆனோரும்
04 - 07 வரையான புள்ளி வீச்சில் 19% ஆனோரும்
00 - 03 வரையான புள்ளி வீச்சில் 7% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வினாவுக்கு 11 இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் 32% ஆக இருக்கும் அதேவேளை 7% ஆனோர் 3 அல்லது அதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




5 ஆம் வினா இரண்டு பிரிவுகளைக் கொண்டது. மொத்த வினாவினதும் இலகுதன்மை 60% ஆகும்.

**வினா இலக்கம் - 05 குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- இவ்வினாவின் இலகுத்தன்மை 60% ஆகக் காணப்படுகின்றது.

**அழைப்புக்கடிதம் :-**

- உள் முகவரி எழுதும் போது யாருக்கு எழுதுவது என்ற தெளிவின்மையால் இடர்பட்டமை.
- நிறுத்தக் குறிப்பிரயோகம் பொருத்தமாகப் பயன்படுத்தாமை
  – விளிப்புக்கு காற்புள்ளி (,) இடுவதற்குப் பதிலாக வியப்புக்குறி பயன்படுத்தப்பட்டமை.
- பொருட் பொருத்தத்தோடு எழுதத்தவறியமை.
- எழுத்துப் பிழைகளைக் கவனத்திற் கொள்ளாமை.

**துண்டுப்பிரசுரம் :-**

- அமைப்புப் பேணப்படாமை.

- வழிகாட்டற் குறிப்பில் உள்ள விடயங்களைப் பின்பற்றி எழுதாமை.
  - சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பது பற்றி எழுதிய பரீட்சார்த்திகள் அதற்காக அரசுடன் இணைந்து பிறசமூக அமைப்புகளும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி எழுதத் தவறியமை.
- பொருத்தமான மொழிநடை பின்பற்றப்படாமை.
- எழுத்துப்பிழையின்றி எழுதத் தவறியமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :-**

**கடிதம் :-**

- பல்வேறுபட்ட தொழில்முறைக் கடிதங்களை இனங்காண வழிப்படுத்தல். (அழைப்புக்கடிதம், விண்ணப்பக்கடிதம் முதலியன)

- கடிதங்களுக்கான அமைப்பு முறையை அனுசரித்து எழுத வழிப்படுத்தல்.

- அனுப்புபவர் முகவரி, பெறுநர் முகவரி, தலைப்பு என்பவற்றை உரிய இடங்களில் உரியமுறையில் எழுதுவதற்கு வழிப்படுத்தல்.

- வழிகாட்டல் குறிப்புக்களை வழங்கி பல்வகைப்பட்ட தொழில்முறை கடிதங்களை எழுதப் பயிற்சியளித்தல்.

**துண்டுப்பிரசுரம் :-**

- துண்டுப்பிரசுரம் எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள்
  - அமைப்பைப் பேணுதல்.
  - வழிகாட்டற்குறிப்பில் கொடுக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு எழுதுதல்.
  - வாசிப்போரைக் கவரக்கூடிய சொல்லாட்சித் திறன்மிக்க வாக்கியங்களை கொண்டிருத்தல்
  - உள்ளடக்கத்திற்குப் பொருத்தமான கவர்ச்சியான தலைப்பை எழுதுதல்.
  - மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கியதான துண்டுப்பிரசுரங்களை எழுதுவதற்கு தூண்டுதல் அளித்தல்.

# தமிழ்மொழியும் இலக்கியமும் - III

## 2.3. வினாப்பத்திரம் III இற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.3.1 வினாப்பத்திரம் III - இன் கட்டமைப்பு

நேரம் :- **2** மணித்தியாலங்கள் மொத்தப் புள்ளிகள் **80**

(விதிக்கப்பட்ட தமிழ் இலக்கிய பாடநூல்)

(1,2,3,4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. 5,6,7 ஆகிய வினாக்களில் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

1. குறுவிடை வினாக்கள் 10.
   (ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)

2. செய்யுட்பகுதியும் உரைநடைப் பகுதியும் சேர்ந்த ஐந்து உபபகுதிகள்.
   ஒரு உபபகுதிக்கு (4 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்)

3. விருப்பு வினாக்கள் 02. அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (15 புள்ளிகள்)

4. விருப்பு வினாக்கள் 02. அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (15 புள்ளிகள்)

5. 5,6,7 ஆகிய வினாக்களில் யாதேனும் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும்.
   (10 புள்ளிகள்)

**வினாப்பத்திரம் III இற்கான மொத்தப் புள்ளிகள்** = 20+20+15+15+10
= 80 **புள்ளிகள்**

## 2.3.2 வினாப்பத்திரம் III - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளிவழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

**வினா இல. 1**

சுருக்கமான விடை தருக.

(i) "விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்."
(அ) இக்கூற்றைக் கூறியவர் யார் ?
(ஆ) 'வெகுளி' என்பதன் பொருள் யாது ?

(ii) "ஏமிரோ வோரி என்பாள்"
"எந்துண்டி வஸ்தி என்பாள்"
(அ) இக்கூற்று இடம்பெறும் சிறுகதை யாது ?
(ஆ) யாருடைய கூற்றாக இது அமைகிறது ?

(iii) "மடைத்தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு."
(அ) மடைத்தலை என்பது யாது ?
(ஆ) வாடியிருக்கும் கொக்கு யாருக்கு உவமையாகக் கூறப்படுகிறது ?

(iv) "ஆடிக்குடத்தடையு மாடும்போதே இரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்..."
(அ) இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது ?
(ஆ) அந்த அணி மூலம் தொடர்புபடுத்தப்படுபவை எவை ?

(v) "கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்"
(அ) மேற்குறித்த செயல்களைச் செய்பவர்கள் யார் ?
(ஆ) இங்கு 'கிம்புரியின் கொம்பு' என்பது எதனைக் குறிக்கிறது ?

(vi) "வளர்ந்தருவி வெட்டும் இளந்தாரிமாரை
நாவூறு வாராமற் காரும் ஐயனாரே."
(அ) இப்பாடல் எத்தொழிலோடு தொடர்புபட்டது ?
(ஆ) இப்பகுதியில் இடம்பெற்றுள்ள கிராமிய நம்பிக்கை யாது ?

(vii) "உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினுஞ்
செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்"
(அ) இங்கு குறிப்பிடப்படும் உயிருடன் சென்ற ஒரு மகள் யார் ?
(ஆ) செயிருடன் வந்த சேயிழை யார் ?

(viii) இப்போது சினிமா மொழி நமக்குப் பரிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறது.
(அ) 'பரிச்சயம்' என்பதன் பொருள் யாது ?
(ஆ) சினிமா மொழி என்பதில் மூன்று அம்சங்கள் உள்ளன. அவற்றுள் ஏதேனும் ஒன்றினைக் குறிப்பிடுக.

(ix) 'தத்தை விடு தூது' என்பது தி.த. கனகசுந்தரம்பிள்ளை இயற்றிய செய்யுளாகும்.
(அ) 'தத்தை' என்பதன் பொருள் யாது ?
(ஆ) தத்தை விடு தூதினூடாக ஆசிரியர் யாருடைய விடுதலை பற்றிக் குறிப்பிடுகிறார் ?

(x) "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையோம் எம் குன்றும் பிறர் கொளார்."
(அ) இங்கு 'எந்தை' என்று குறிப்பிடப்படுபவர் யார் ?
(ஆ) இங்கு குறிப்பிடப்படும் குன்றின் பெயர் யாது ? (20 புள்ளிகள்)

1 **ஆம் வினாவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) (அ.) பாரதியார் / சுப்பிரமணிய பாரதியார் / மகாகவி பாரதியார்

(ஆ.) கோபம் / சினம் / சீற்றம் / முனிவு / காய்தல்

(ii) (அ.) கம்பியூட்டர்

(ஆ.) காளமேகப்புலவர் / காளமேகம்

(iii) (அ.) வாய்க்கால் / நீரோடும் வாய்க்கால்

(ஆ.) அடக்கமுடையவர்களுக்கு

(iv) (அ.) சிலேடை

(ஆ.) பாம்பு, எள்

(v) (அ.) குறத்தியர் / குறத்திப் பெண்கள்

(ஆ.) யானையின் பூணணியப்பட்ட தந்தத்தை / யானையின் தந்தத்தை

(vi) (அ.) அரிவி வெட்டும் தொழிலோடு / உழவுத் தொழிலோடு / அறுவடை செய்யும் தொழிலோடு

(ஆ.) நாவூறு தொடர்பான நம்பிக்கை / ஐயனார் தொடர்பான நம்பிக்கை (கடவுள் நம்பிக்கை)

(vii) (அ.) பாண்டிமா தேவி

(ஆ.) கண்ணகி

(viii) (அ.) பழக்கமானது / அறிமுகமானது / தெரிந்தது / தொடர்புள்ளது.

(ஆ.)
1. காட்சிப்படிமம்
2. ஒலி
3. படத்தொகுப்பு (ஏதேனும் ஒன்று)

(ix) (அ.) கிளி

(ஆ.) பெண் விடுதலை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

(x) (அ.) பாரி மன்னன் / பாரி / அங்கவை சங்கவையின் தந்தை

(ஆ.) பறம்பு மலை / பறம்பு (2 x 10 = 20 புள்ளிகள்)

**1ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




1ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்கான மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

16 - 20 வரையான புள்ளி வீச்சில் 24% ஆனோரும்
11 - 15 வரையான புள்ளி வீச்சில் 34% ஆனோரும்
06 - 10 வரையான புள்ளி வீச்சில் 22% ஆனோரும்
00 - 05 வரையான புள்ளி வீச்சில் 20% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 10 உபபிரிவுகள் காணப்படுகின்றன. கடினத்தன்மையுடைய வினாக்களாக (v) (அ), (viii) (அ) ஆகியன அமைந்துள்ளன.

**01 ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள்**

- 1 ஆம் வினாவில் 10 குறுவிடை வினாக்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வினாவிலும் (அ, ஆ) என இருபகுதிகள் உள்ளன.
- 1 ஆம் வினாவிற்கான பரீட்சார்த்திகளின் துலங்கல் திருப்திகரமானதாக உள்ளது.
- குறைந்த அடைவுமட்டத்தை பெற்ற வினாக்களாக v - (அ), viii (அ) என்பன காணப்படுகின்றன. இவற்றின் இலகுதன்மைகள் முறையே 41% ஆகவும் 34% ஆகவும் காணப்படுகின்றன.
- v- (அ) அநேகமான பரீட்சார்த்திகள் "மலையகப் பெண்கள்" என்று விடையளித்துள்ளனர்.
- viii- (அ) பரிச்சயம் என்ற சொல்லுக்கு பொருள் விளங்கிக் கொள்ளாதுள்ளனர்.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :-**

- கேட்கப்பட்ட வினாவிற்கு சுட்டிப்பாக விடையளிக்கப் பயிற்றுவித்தல்.
- இலக்கியத் தொகுப்பிலுள்ள பாடப்பரப்புக்களைத் தெளிவாக விளங்கிக்கொள்வதற்கான கற்றலுக்கான வழிகாட்டலும் பயிற்சியும் வழங்குதல்.
- வகுப்பறையில் இவ்வாறான வினாக்களைக் கொடுத்து மாணவர்களை விடை எழுதச் செய்தல்.
- சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கான பயிற்சிகளை வழங்குதல்.

**வினா இல.2**

**2.** பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வின விடை எழுதுக.

(i) தேம்படு பனையின் நிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவற் கிருக்க நிழலா காதே
தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே
அதனால்
பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம்
சிறியரு மல்லர்.

(அ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நாற்படைகளும் எவை ?
(ஆ) இப்பாடல் உணர்த்தும் உண்மை யாது ?

(ii) சூழ மேதி யிறங்குந் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற் றாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்திர சூடர்தென் னாரிய நாடே.

(அ) இப்பாடலில் நாட்டு வளத்தை விவரிப்பதற்கு எடுத்தாளப்பட்டுள்ள விடயங்கள் யாவை ?
(ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமையின் பொருத்தப்பாட்டினை விளக்குக.

(iii) தம்மனைக்கோர் பசுவேண்டிற் றாம்பலகாற் பார்த்திருந்தும்
பின்னுந் துணிவிலராய்ப் பேதுறுதல் மாந்தர் குணம்
என்னே மணவினையே லிமைப்பொழுதி லேமுடிப்பார்
சின்னப் பதுமைகொடு சிறார் செய்மணம் போலுமரோ
தெரிவையவட் கிம்மாற்றஞ் சீர்க்கிளியே கூறுதியால்

(அ) இப்பாடலில் கவிஞர் மாந்தரது குணத்தை எவ்வாறு கண்டிக்கிறார் ?
(ஆ) ஆராயாது செய்யும் திருமணத்தை எதற்கு உவமிக்கிறார் ?

(iv) கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு - வாள் - சக்கரம் - இவற்றிற்கு மேலே தெய்வப் படைகளிலுங் கைவைக்கின்ற சமயம்; அந்தச் சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேச வந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள், வாதம் இல்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள், நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்கு எதிர்பாராத அனுகூலம் அளித்தது, பிறிற்றோவை ஆகாசத்திலே தூக்கிக்கொண்டு போய் வைத்துவிட்டார்கள் அவர்கள். இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது.

(அ) வாதம் உச்சக்கட்டம் அடைந்துவிட்டதை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கிறார் ?
(ஆ) 'வாதம் இல்லா இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள்' என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது ?

(v) நாம் இலக்கியங்களைப் படிக்கின்றோம். அங்கே என்ன காண்கின்றோம்? இலட்சியங்களைக் காண்கின்றோம். இலட்சியங்களைக் கடைப்பிடித்தொழுகிய இலட்சியவாதிகளைக் காண்கின்றோம். எதிர்மறை முகத்தால் இலட்சிய வாழ்வினை உயிர்பெறச் செய்த ஏனையோரையும் காண்கின்றோம். நிறைவுடைய கதாபாத்திரங்களும் குறைவுடைய கதாபாத்திரங்களும் நம்மை இலட்சியமென்கின்ற குறிக்கோளை நோக்கிச் செலுத்துவதை நாம் இலக்கியங்கள் வாயிலாக உணர்ந்து கொள்ளுகின்றோம். இந்த உணர்ச்சி நம்மிடையே பிறவாதபோது நாம் இலக்கியங் கொண்டு இடர்ப்படுவோமேயன்றி, இன்பங் காண்பதில்லை. இலக்கியத் திறவுகோலை நாம் பெறுதல் வேண்டும். பெற்றால் இன்பங் காண்போம்.

(அ) இங்கு இலட்சியவாதிகள் யார் என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார் ?

(ஆ) இலக்கியத்தில் இன்பம் காண்பதற்கு யாது செய்ய வேண்டுமெனக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார் ?

(20 புள்ளிகள்)

2 ஆம் வினாவவிற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

(i) (அ.) யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட் படை

(ஆ.) உருவத்தை வைத்து யாரையும் மதிப்பிட முடியாது / உருவத்தால் பெரியோரெல்லாம் அறிவில் / பயனில் / குணத்தில் பெரியவர்களாகமாட்டார்கள். உருவத்தால் சிறியோரெல்லாம் அறிவில் / பயனில் / குணத்தில் சிறியவர்களாக மாட்டார்கள்.

(ii) (அ.) நீர்நிலைகள்
பால் சொரியும் பசுக்கள்
பயன் தரும் மரங்கள்

(ஆ.) உவமை
"வரு விருந்துக் குபசரிப்பார் போல் தாழை சோறிட வாழை குருத்திடும்"
உவமையின் பொருத்தப்பாடு
விருந்தினர்களை உபசரிப்பவர்கள் போல தாழையானது பூக்களைச் சோறு போலச் சொரிய, வாழையானது அதனைப் பெறுவதற்காகத் தனது குருத்து இலையை விரிக்கிறது.

(iii) (அ.) தமது வீட்டுக்கு ஒரு பசு வாங்குவதென்றால் கூட பலமுறை யோசித்து, வாங்கும் துணிவின்றித் தடுமாறும் மனிதர்கள், பெண்ணின் திருமணம் என்றால் யோசிக்காது கண்ணிமைப் பொழுதினிலே முடித்து விடுவார்கள்.

(ஆ.) சிறிய பொம்மைகளைக் கொண்டு சிறுவர்கள் விளையாடும் பொம்மைக் கலியாணத்திற்கு உவமிக்கிறார்.

(iv) (அ.) வார்த்தைப் பிரயோகங்களை ஆயுதங்களுக்கு (கைவேல், எறிகிற வேல், இறகுள்ள அம்பு, வாள், சக்கரம்) ஒப்பிட்டு இவற்றுக்கு மேலே தெய்வப் படைகளிலும் கைவைக்கிற சமயம் என விவரிக்கிறார்.
பிரிற்றோவின் கட்சியின் வாதங்கள் உச்சத்துக்கு வந்துவிட்டதாகவும், இராமநாதன் கட்சி சோர்ந்து போய்விட்டது என்றும் குறிப்பிடுவதன் மூலம். (என எழுதினால் 1 புள்ளி)

(ஆ.) விவாதிக்கக் கூடிய விடயம் இல்லாவிட்டாலும் அதனை ஒரு விவாதமாக வாதிடுவார்கள்.

(v) (அ.) இலட்சியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவோரை

(ஆ.) இலக்கியங்கள் உணர்த்தும் குறிக்கோளை உணர்ந்து அனுபவித்தல் வேண்டும்.

(4 x 5 = 20 புள்ளிகள்)

**2ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




2ஆம் வினாவும் கட்டாய வினாவாக இருந்த போதும் 99% ஆனவர்களே இவ்வினாவைத் தெரிவு செய்துள்ளனர். இவ்வினாவிற்குரிய மொத்தப்புள்ளிகள் 20 ஆகும்.

16 - 20 வரையான புள்ளி வீச்சில் 12% ஆனோரும்
11 - 15 வரையான புள்ளி வீச்சில் 27% ஆனோரும்
06 - 10 வரையான புள்ளி வீச்சில் 32% ஆனோரும்
00 - 05 வரையான புள்ளி வீச்சில் 29% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவில் 10 பிரிவுகள் காணப்படுகின்றன.

கடினத்தன்மையுடைய வினாக்களாக (ii) (ஆ), (iii) (அ), (ஆ), (v) (ஆ) ஆகியன அமைந்துள்ளன. இலகுதன்மை மிகக் கூடியனவாக (i) (அ), (ஆ), (v) (அ) ஆகிய வினாக்கள் அமைந்துள்ளன. வினா (v) இன் (ஆ) பிரிவுக்கு 26% ஆன பரீட்சார்த்திகள் மாத்திரமே விடையளித்துள்ளனர்.

வினா - 02 இல் ஐந்து பகுதி வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவிலும் கொடுக்கப்பட்ட பகுதிகளில் (அ,ஆ) என இருவினாக்கள் வினவப்பட்டுள்ளன.

பரீட்சார்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.

- இவ்வினாவிற்கு பரீட்சார்த்திகள் ஓரளவு திருப்திகரமாக விடையளித்துள்ள போதும் (v) (ஆ) வினாவிற்கு 26% மான மாணவர்களே சரியான விடையளித்துள்ளார்கள்.
- குறிப்பிட்ட (v)(ஆ) வினாவைத் தெளிவாகக் கிரகித்துக் கொள்ளாமை.
- கொடுக்கப்பட்ட உரைப் பகுதியைச் சரியான முறையில் உள்வாங்கிக் கொள்ளாமை.
- கொடுக்கப்பட்ட பகுதியை மேலோட்டமாக வாசித்து விடையளித்தமை.

உதாரணம் :- “இலக்கியத்திறவுகோலை நாம் பெறுதல் வேண்டும் பெற்றால் இன்பங்காண்போம்” என்ற விடையே பெரும்பாலான பரீட்சார்த்திகளால் எழுதப்பட்டிருந்தது.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :-**

- கொடுக்கப்பட்ட பகுதியை வாசித்து கிரகித்தல்.
- கேட்கப்பட்ட வினாக்களுக்கு பொருத்தமான விடையைச் சுட்டிப்பாக எழுதுதல்.
- வகுப்பறையில் இவ்வாறான வினா தொடர்பான பயிற்சிகளை வழங்கி சரியாக விடை எழுதும் முறையினைப் பயிற்றுவித்தல்

## வினா இல. 03

**3.** **பாரதியார் சுயசரிதையில்,**

(அ) காதலியை எதிர்பார்த்தலும் அவளின் பார்வை கிட்டியதில் ஏற்பட்ட மகிழ்வும்

(ஆ) முயற்சியில் முழுமனதோடு ஈடுபடாது தோல்வியைத் தழுவுவோரின் நடத்தைகளும்

விவரிக்கப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

**கிருட்டினன்தூதுச் சருக்கத்தில்,**

(அ) தருமனுடைய பொறுமையும்

(ஆ) வீமனின் ஆவேசமும்

வெளிப்படுமாற்றினை விவரிக்குக. (15 புள்ளிகள்)

(அ.) எதிர்பார்த்தல்

- காதலி, தண்ணீர் எடுக்கச் செல்லும் வேளையெல்லாம் அவளைக் காணக் காத்திருத்தல்.
- தேச பக்தர்களை அழித்து விட, ஆட்சி செய்யும் மன்னர்களின் படை வீரர்கள், காத்திருப்பது போல தானும் காத்திருந்ததாக உவமை மூலம் கூறுதல்.
- காணும் ஆசையோடு காத்திருந்து அவள் போகின்ற வழி முழுவதும் அவளது பின்னழகினைக் கண்கள் இரசித்து மகிழல்.

  தேரின் சில்லில் ஒட்டிக்கொண்ட அகப்பட்ட கொம்பில்லாத சிறு விலங்கொன்று தேர் உருளும் இடமெல்லாம் சில்லுடன் சேர்ந்து செல்லல் போல் அவளது நினைவுகளால் கோர்க்கப்பட்ட மனத்துடன் செல்வதாகக் கூறுதல். (05 புள்ளிகள்)

பார்வை கிட்டியதில் மகிழ்வு

- அவளது பார்வை கிட்டியதும் ஐம்புலன்களும் அழியப்பெற்று புதிய பிறவியினைப் பெற்றதாக உணர்கிறார்.

  “பூத்த ஜோதி வதனம் திரும்புமேல் புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்”

(03 புள்ளிகள்)

(ஆ.) தோல்வியைத் தழுவுவோரின் நடத்தைகள்

- தலைவிதியை நொந்து கொள்வர்.
- நண்பரை ஏசுவர்.
- கோபமிகுதியால் பகைவர்களை அவமானப்படுத்துவர்.
- கபட வேலைகளில் ஈடுபடுவர்.
- பொய்யான சாத்திர சம்பிரதாயங்களைக் கூறுவர்.
- சாதகங்களைப் புரட்டிப் பார்த்தல்.
- பொய்மை கலந்த புத்தியினால் கடவுள் இல்லையென்று கூறுவர்.

(பாடல் அடிகளை மட்டும் எழுதினால் 4 புள்ளிகள்)

(07 புள்ளிகள்)

(5 + 3 + 7 = 15)

**அல்லது**

(அ.) தர்மனின் பொறுமை

போரை விரும்பாது பொறுமை காத்த தருமன் கிருஷ்ணரைத் தூது செல்லுமாறு வேண்டுகின்றான்.

- சினத்துடன் போர் புரிந்தால் இரண்டு பக்கத்தினரும் இறந்து விடுவோம் சேர்ந்து வாழ சமாதானம் உண்டாகத் தூது செல்வாயாக எனல்.
- போரில் தங்கள் குரவர்கள், உறவினர்கள், தம்பியர்கள் ஆகியோரைக் கொன்ற பின் ஆட்சியைப் பெறுவதிலும் பார்க்கக் காட்டில் வாழ்தல் நன்று எனல்.
- தூது உரைத்த பின்னர் நாட்டின் பாகத்தையும் அதிகாரங்களையும் தர மறுத்தால் தான் போர் புரிந்து நாட்டைப் பெறுவது வசையாகாது எனல்.
- பாதிநாடு, ஐந்து ஊர்கள், ஐந்து இல்லங்கள் எனக் கேட்டு அவற்றைத் தர மறுத்தால் போர் என எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்தல்.
- ஆத்திரத்துடன் தன்னை அவதூறாகப் பழித்துப் பேசிய தம்பி வீமனை அமைதிப்படுத்தி, அவனது வீரத்தைப் புகழ்ந்து, "குற்றம் பார்க்குங்கால் சுற்றம் இல்லை" எனக் கூறி, "ஒரு குலத்துப் பிறந்தோர் உடன் வாழும் வாழ்வே உறுதியானது. அது இன்றேல் வசை ஏற்படும் எனல்.
- அன்று சபையில் அறியாமை காரணமாகத் துரியோதனன் முதலியோர் கூறிய சொற்கள் நமக்கு அவமானமன்று, அவமானம் பிறரால் உண்டாவது, **தமரால்** உண்டாவது அவமானமாகாது (தன் கை தனது கண்களில் படுதல் குற்றமன்று) எனல்.
- போர்த்தொழில், மன்னர்க்குரிய இறுதி உபாயமே என உரைத்தல்.

(08 புள்ளிகள்)

(ஆ.) வீமனின் ஆவேசம்

- துரியோதனனிடம் தூது சென்று சமாதானம் பேசுமாறு தருமன், கண்ணனைக் கேட்டதை மிகவும் வெறுத்துப் பேசியவன்.
- வெஞ்சினம் மனத்தில் மூளமூள, நாவின் உரை குளற விரைவாக எழுந்து வார்த்தைகளைக் கடுமையாகக் கூறுகிறான் என்ற கவிஞர் கூற்றின் மூலம் ஆவேசம் புலப்படல்.
- தனது அண்ணனையே மானம் இல்லாதவன் என்று கூறுதல்.
- கௌரவர் சபையில் திரௌபதியைத் துச்சாதனன் துகிலுரித்த போது எம்மை அமைதி கொள்ளுமாறு கூறியதன் மூலம் குல மரபுக்கும் நமக்கும் தீராப்பழியை ஏற்படுத்தியவன் என அண்ணனையே குற்றம் சாட்டுதல்.
- துரியோதனின் கொடுமையிலும் தருமனின் அருளுக்காக அஞ்சுவதாகக் கூறி அண்ணனைக் கடிதல்.
- துரியோதனன் உயிரைப் போரில் கவர்ந்து விண்ணுலகு அனுப்புவதுடன், நாட்டை மீட்டுத் தருமருக்குத் தருவதாக ஆவேசமாகக் கூறுதல்.
- வீரனாகிய நான் வீரமற்ற தருமனுக்குத் தம்பியாகப் பிறப்பது தகுதியோ எனச் சினமடைதல்.
- போரில் துரியோதனனையும் அவனுக்கு துணைவரும் அரசர்களினையும் வென்று நாட்டை ஆளாமல் இரந்து தூது செல்லுமாறு கேட்பது நாம் முன்பு பட்ட துன்பங்களையே மிஞ்சியது எனல்.
- திரௌபதியினதும் தன்னுடையதும் சபதங்கள் நிறைவேறத் துரியோதனிடத்தில் தான் தூது செல்கிறேன் என்று ஆத்திரப்படல். (07 புள்ளிகள்)

(08 + 07 = 15 புள்ளிகள்)

### 3ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




3ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.

12 - 15 வரையான புள்ளி வீச்சில் 14% ஆனோரும்
08 - 11 வரையான புள்ளி வீச்சில் 23% ஆனோரும்
04 - 07 வரையான புள்ளி வீச்சில் 23% ஆனோரும்
00 - 03 வரையான புள்ளி வீச்சில் 40% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




3ஆம் வினாவானது இருபிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் ஒரு பிரிவுக்கே பரீட்சார்த்தி விடைஎழுத வேண்டும். ஒவ்வொரு பிரிவும் இரண்டு உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி தொடர்பாக, உபபிரிவு (அ) இற்கு 60% ஆனவர்களும் உபபிரிவு (ஆ) இற்கு 59% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர். இரண்டாம் பிரிவு தொடர்பாக, உபபிரிவு (அ) இற்கு 66% ஆனவர்களும் உபபிரிவு (ஆ) இற்கு 62% ஆனவர்களும் சரியாக விடையளித்துள்ளனர்.

3ஆம் வினா இரு பிரிவுகளைக் கொண்டதுடன் அதில் ஒரு பிரிவிலுள்ள (அ), (ஆ) வினாக்களுக்கு மட்டும் விடையளித்திருத்தல் வேண்டும். நன்றாகத் தெரிந்ததை தெரிவு செய்து எழுதுவதற்கு மாணவருக்கு வாய்ப்பாக உள்ளது.

**குறைந்த அடைவுமட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை**

- சரியான விடை தெரிந்த போதிலும் அதனை முன்வைப்பதில் பரீட்சார்த்திகள் இடர்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.
- பாடப்பகுதியை மேற்கோள்காட்டி எழுதும் திறனின்மை

**அடைவுமட்டத்தை மேலும் அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்**

- இலக்கியத் தொகுப்பில் கொடுக்கப்பட்ட பாடப்பரப்புக்களை முழுமையாக விளங்கிக் கொள்ள வழிவகுத்தல்.
- பாடப்பரப்பிலுள்ள விடயங்களைப் பகுதிபகுதியாக விளங்கிக்கொள்ள வழிவகுத்தல்.
- மாதிரி வினாக்களைக் கொடுத்து விடை எழுதப் பயிற்றுவித்தல். விடைகளைத் திருத்தி, கலந்துரையாடி, பின்னூட்டல் வழங்கல்.
- விடை எழுதும் போது பாடப்பரப்பிலுள்ள அடிகளை எடுத்துக் காட்டி முன்வைக்கும் ஆற்றலை விருத்தி செய்தல்.
- விடயங்கள் தொடர்பாக பேச்சு, விவாதம் போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தல்.

**வினா இல.4**

**4.** **மூத்தம்மா** என்ற சிறுகதையில்,
(அ) கதைக்கள வர்ணனை
(ஆ) மூத்தம்மா என்ற பாத்திரப்படைப்பு
என்பன அமைந்திருக்கும் விதத்தை விளக்குக.

**அல்லது**

**அற்றைத்திங்கள்** என்ற நாடகத்தில்,
(அ) புலப்பெயர்வின் அவலம்
(ஆ) நாடகாசிரியரின் படைப்பாற்றல்
என்பன புலப்படுமாற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

4. (அ.) கதைக்கள வர்ணனை

மூத்தம்மா என்ற சிறு கதையில் ஒரு கடற்கரையோரக் கிராமம் களமாக அமைந்துள்ளது. அக்கிராமம் தொடர்பாகக் கதை ஆசிரியர் விபரிப்பது.

- இயற்கைக் காட்சிகள் (மேகங்கள் நிலவை மூடி ஆலிங்கனம் செய்தல்......)
- கிராமத்தின் இயல்பான காட்சிகள், நடவடிக்கைகள், (மஞ்சோனா மரத்தில் பக்குல் கத்துதல்......)
- களத்திற்குப் பொருத்தமான உரை நடைப் பிரயோகம். (07 புள்ளிகள்)

(ஆ.) மூத்தம்மா என்ற பாத்திரப் படைப்பு

- மூத்தம்மா என்ற பெயரின் பொருத்தப்பாடு (தலைமைத்துவம்)
- அவளின் கிராமியம் சார்ந்த நாளாந்த நடவடிக்கைகள் ( குடும்பப் பெண்)
- பேரப் பிள்ளைகளிடம் காட்டும் பரிவின் தொடர்ச்சி (பரிவுடைய பெண்)
- பேரப்பிள்ளைகள் அவளிடம் காட்டும் அன்பு.
- ஊர்க்காரர் அவளிடம் கொண்ட மதிப்பு (நன் மதிப்புடைய பெண்)
- பேரப் பிள்ளையிடம் அவளின் செல்வாக்கு (தனது நடவடிக்கைகள் ஊடாக புதிய தலை முறையிடம் ஆளுமையை விதைத்துச் செல்லல்.) (08 புள்ளிகள்)

(07 + 08 = 15 புள்ளிகள்)

**அல்லது**

(அ.) புலம் பெயர்வின் அவலம்

- பாரியின் பறம்பு மலையை கைப்பற்றியமையும் பாரியின் இறப்பும் நிகழ்ந்ததன் பின்னர் பாரி மகளிர் பறம்பு மலையை விட்டு புலம் பெயரும் சூழல் ஏற்படுகிறது. அவர்கள் கபிலருடன் புறப்படுகிற சூழலை அடிப்படையாகக் கொண்டு புலம் பெயர்வின் அவலம் வெளிப்படுத்தப்படல்.
- நாட்டுப் புறத் தாலாட்டுப் பாடலின் ஊடாக மன அவலத்தை வெளிப்படுத்துதல்.

  அழகான நடை வண்டி
  அசைந்தாடும் கிலு கிலுப்பை..........

- அங்கவை, சங்கவை ஆகியோரின் கூற்றுகளாக அமைவன.
  - பறம்பு மலையின் பால் வார்க்கும் நிலவை எவ்வாறு எடுத்துச் செல்வது.
  - இந்தப் புன் செய் நிலங்களை விட்டுட்டுப் போக வேண்டியதுதான்.
  - குடிசைகளை விட்டுப் போக வேண்டியது தான்.

கபிலர் வாயிலாக

- இப்போது மலையைப் பிரிவது மலையை விடக் கூடுதலாகக் கனக்கிறது.
- பறம்பு மலை சுனை நீரை முடிந்த மட்டும் குடியுங்கள்.
- மலைப் பூக்களின் மணங்களை நுகருங்கள் என்று குறிப்பிடுகிறார் (09 புள்ளிகள்)

(ஆ.) நாடகாசிரியரின் படைப்பாற்றல்.

- புறநானூற்றுச் செய்யுள் வடிவத்திற்கு புது வடிவம் கொடுத்தல். நாடக வடிவம்
- களச்சித்திரிப்பு
  பறம்பு மலை மீதான முற்றுகை, பிரிவு ஆகியவற்றைக் கவிதையாகவும் உரை நடையாகவும் சித்திரித்தல்.
- பாத்திரப்படைப்பு
  பண்டைய கதையொன்றில் குறிப்பிடப்படும் பாத்திரங்களைப் படைத்து அவற்றின் ஊடாகக் கதையை நகர்த்தல்.
- உணர்வலைகள்
  புலம் பெயர் நிலையின் அவலத்தையும், சோகத்தையும் இணைத்து வெளிப்படுத்தல்.
- மொழி நடைப் பிரயோகம் (செம்மொழிச் சொற்கள்)
- சமகாலத்துடன் தொடர்புபடுத்துதல். (06 புள்ளிகள்)

(பாடல் அடிகள் மட்டும் எழுதின் 4 புள்ளிகள்)

**4ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




4ஆம் வினாவும் கட்டாய வினாவாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 15 ஆகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 - 15 | வரையான | புள்ளி | வீச்சில் | 8% | ஆனோரும் |
| 08 - 11 | வரையான | புள்ளி | வீச்சில் | 25% | ஆனோரும் |
| 04 - 07 | வரையான | புள்ளி | வீச்சில் | 34% | ஆனோரும் |
| 00 - 03 | வரையான | புள்ளி | வீச்சில் | 33% | ஆனோரும் |

புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இரு பிரிவுகளைக் கொண்ட நான்காம் வினாவில் ஒரு பிரிவுக்கே பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும் ஒவ்வொரு பிரிவும் இரண்டு உபபிரிவுகளைக் கொண்டுள்ளது

முதற்பிரிவு தொடர்பாக, உபபிரிவு (அ) இற்கு 40% பரீட்சார்த்திகளும் உபபிரிவு (ஆ) இற்கு 77% ஆன பரீட்சார்த்திகளும் சரியாக விடையளித்துள்ளனர்.

இரண்டாம் பிரிவு தொடர்பாக, உபபிரிவு (அ) இற்கு 59% பரீட்சார்த்திகளும் உபபிரிவு (ஆ) இற்கு 40% பரீட்சார்த்திகளும் சரியாக விடையளித்துள்ளனர்.

4 ஆம் வினா கட்டாய வினாவாகும். இவ்வினா இரு பிரிவுகளைக் கொண்டது. அதில் ஏதேனும் ஒரு பிரிவிலுள்ள (அ), (ஆ) வினாக்களுக்கு மட்டுமே விடையளித்தல் வேண்டும் இரு பிரிவுகளில் ஒன்றைத் தெரிவு செய்வது மாணவர்களுக்கு வாய்ப்பாக உள்ளது.

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினாவை விளங்கி சுட்டிப்பாக விடை எழுதத் தவறியுள்ளமை.
- பாடப்பரப்பிலுள்ள விடயங்களை உள்வாங்கிய போதும் அப்பாடப்பரப்புத் தொடர்பான ஏனைய விடயங்களை அறியும் ஆற்றலின்மை. உதாரணம் - கள வர்ணணை, படைப்பாற்றல்.
- பாடப்பரப்புத் தொடர்பாக வெவ்வேறு கோணங்களில் ஆராயும் திறன் இன்மை.
- விடையினைப் பொருத்தமான முறையில் முன்வைப்பதில் இடர்பட்டமை.

**அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:-**

- தரப்பட்ட ஆக்கங்களின் உள்ளடக்கங்கள் மட்டுமன்றி அதனைப் படைத்த ஆசிரியர், அவரது ஆற்றல், கதைக்களம், வர்ணனை, மொழிநடை என்பனவற்றையும் மாணவர்கள் சரியான முறையில் விளங்கி முன்வைப்பதற்கு வழிவகுத்தல்.
- சிறுகதை ஒன்றைப் படிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்களை வலியுறுத்திக் கூறுதலும் அதனை மாணவன் வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதலும்.
  உதாரணம் - கதைக்கரு, கதைக்களம், பாத்திர குணாம்சம், கதைப்பின்னல், ஆசிரியரின் படைப்பாற்றல், ஆசிரியரின் மொழியாற்றல், பாத்திர வார்ப்பு.
  இப்பயிற்சி மாணவர்கள் சுயமாகச் சிறுகதை எழுதும் ஆற்றலை விருத்தி செய்ய உதவும்.
- நாடகத்தைக் கற்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்களை வலியுறுத்திக் கூறுதலும் அதனை மாணவன் வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குதலும். கதைக்கரு, கதைக்களம், பாத்திரக்குணாம்சங்கள், ஆசிரியரின் படைப்பாற்றல், ஆசிரியரின் மொழியாற்றல், பாத்திரவார்ப்பு, உணர்ச்சி வெளிப்பாடு, ஆசிரியர் கையாண்ட உத்திகள் (சமகாலத்துடன் தொடர்பு படுத்துதல்) என்பவற்றைக் கவனத்திற்கொண்டு கற்றலும் கற்பித்தலும்.
- மாதிரி வினாக்களைக் கொடுத்து தெளிவான முறையில் முன்வைப்பதற்கு பயிற்றுவித்தல்.
- பாத்திரங்களாகப் பாவனைசெய்து உரையாடவோ, நடிக்கவோ வழிகாட்டுதல்.
- இலக்கியங்களை நயக்க வழிகாட்டுதல்.
- கதாசிரியர்கள், கவிஞர்கள், உரையாசிரியர்கள் தமது கருத்தைக் கூறக் கையாண்ட உத்திகளை மாணவர்கள் இனங்கண்டு வெளிப்படுத்த வழிகாட்டல்.

● **5, 6, 7** ஆகிய வினாக்களுள் ஏதாவது **ஒன்றைத்** தெரிவுசெய்து விடை எழுதுக.

**5. தேயிலைத் தோட்டத்திலே** என்ற கவிதையில்,

(அ) தொழிலாளரின் உழைப்பும்

(ஆ) அவர்கள் மீதான கவிஞரின் பரிவும்

வெளிப்படுமாற்றை விளக்குக. (10 புள்ளிகள்)

5. (அ.) தொழிலாளர் உழைப்பு

- உழைப்பைக் கொடுத்தும் உடலைப் பசளையாக்கியும் மண்ணை உயிர்ப்பித்தவர். (வளம் பெறச் செய்தவர்.)
- பரம்பரை பரம்பரையாக உழைத்தல்.
- தேயிலைச் செடியின் அடியில் புதைக்கப்பட்டிருக்கும் அப்பாவின் புதைமேட்டில் மகன் நின்று உழைத்தல்.
- தொடர்ந்து உடலை வருத்தி உழைத்தும் ஏழையாக இருத்தல்.
- இங்குள்ளோர் வசதியாக வாழ்வதற்காகத் தமது உயிரைத் தருதல்.

(04 புள்ளிகள்)

(ஆ.) அவர்கள் மீதான கவிஞரின் பரிவு

- புழுதியில் புதைந்த தொழிலாளர்களைப் போற்றிப் பாடிய இரங்கற்பா இல்லை.
- கல்லறை, நினைவு நாள் இல்லாமை.
- மனம் கசிந்து அன்போடு நினையாமை.
- புதைமேட்டில் ஒரு காட்டுமலரையாவது பறித்துப் போடவில்லை என்பதன் மூலம் ஆதங்கத்தை வெளிப்படுத்தல்.
- கடின உழைப்பைத் தந்து உயிரை அர்ப்பணித்தவர்களை நினைக்காத மனிதர்களை என்னே மனிதர் என ஆற்றாமையை வெளிப்படுத்தல்.
- மனிதரின் இந்தச் செயலிற்காக வெட்கப்பட்டு இறைவன் பசும்புல்லால் தரையை மறைத்திருக்கிறான் எனத் தனது கருத்தை ஏற்றிச் சொல்லல்.

(06 புள்ளிகள்)

(04 + 06 = 10 புள்ளிகள்)

**5ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**




5ஆம் வினா தெரிவு வினாக்களில் ஒன்றாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08 - 10 வரையான புள்ளி வீச்சில் 13% ஆனோரும்
06 - 07 வரையான புள்ளி வீச்சில் 18% ஆனோரும்
03 - 05 வரையான புள்ளி வீச்சில் 27% ஆனோரும்
00 - 02 வரையான புள்ளி வீச்சில் 42% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




இவ்வினாவின் (அ), (ஆ) என்ற உபபிரிவுகளுக்கு முறையே 61%, 57% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையளித்திருந்தனர். இவ்வினா ஓரளவு இலகுதன்மை வாய்ந்ததாகும்.

**5ம், 6ம், 7ம் இலக்க வினாக்கள் தெரிவு வினாக்கள் ஆகும். பரீட்சார்த்தி ஒரு வினாவுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். இதற்கான புள்ளி 10 ஆகும்.**

**வினா இலக்கம் - 05**

**குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்ற பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- கேட்கப்பட்ட வினாவுக்கு முழுமையாக விடையளிக்கத் தவறியுள்ளமை.
- கவிதையில் உள்ள விடயங்களை சொந்தமொழிநடையில் எழுதாமை.
- சுட்டிப்பாக விடையை இனங்கண்டு எழுதத் தவறியுள்ளமை.
  உதாரணம் - தொழிலாளர் மீதான கவிஞரின் பரிவு பற்றி அறிந்துள்ள விடயங்களை முன்வைக்கும் ஆற்றலின்மை.

**அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :-**

- வினாவுக்கு ஏற்ப பொருத்தமான விடையை எழுதுவதற்கான பயிற்சிகள் வழங்குதல்.
- சொந்த மொழிநடையில் விடையை எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.
- கவிஞரின் கவித்திறன், உணர்வு, கையாண்ட உத்திகள், மொழிநடை என்பவற்றை தெளிவுபடுத்துதலும், முன்வைப்பதற்கு நெறிப்படுத்துதலும்.
- மாணவர்கள் தங்களது சூழலில் அவதானித்த வாழ்வியல் சவால்களை கவிதையாக்குவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தல்.

**வினா இல.6**

**6. பங்கப் பழனத்து...** என்று தொடங்கும் பாடலில்,

(அ) நாட்டுவளம், மன்னனின் ஆற்றல் என்பனவும்

(ஆ) தலைவன்மீது தலைவி கொண்ட காதலும்

விவரிக்கப்படுமாற்றினை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

(அ.) நாட்டு வளம்

- நாட்டிலுள்ள நிலவளம், நீர் வளம், தாவர வளம், என்பவற்றின் மூலம் வளத்தைக் காட்டுதல்.
- குரங்குகள் பலாக்கனிகளைப் பறித்து எறிதல்.
- உழவர் சங்குகளால் குரங்குகளுக்கு எறிதல்.
- பதிலுக்கு செவ்விளநீரைப் பிடுங்கி எறிதல்.

(வயல், சங்குகள், கனிகள், செவ்விளநீர் என்பவை காட்சிப்படுத்தல் மூலம் வளத்தை எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.)

(04 புள்ளிகள்)

மன்னனின் ஆற்றல்

- கொங்கு தேசத்தவர்களைப் போரிலே கொன்று அவர்களுக்குச் சொர்க்கத்தை அளித்தவன் என்பதன் மூலம் மன்னனின் வீரமும், படைத்திறனும் எடுத்துக் காட்டப்படல்.
- இராசகுல திலகமாகப் போற்றப்படல்.

(02 புள்ளிகள்)

(ஆ.) தலைவன் மீது கொண்ட காதல்.

- தலைவனைப் பிரிந்த தலைவி ஒருத்தி மாலை நேரத்தில் அடைகின்ற துன்பம்
- வெம்மை நிறைந்த சந்திரன் காதலைத் தூண்டி வருத்துதல்.
- மன்மதன் கணைகள் காதலை ஏற்படுத்தி வருத்துதல்.
- உடல் மெலிதல், கண்ணீர் சொரிதல்.

(04 புள்ளிகள்)

(04 + 02 + 04 = 10 புள்ளிகள்)

**6ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்**

**6ஆம் வினாவுக்கு புள்ளிகள் பெற்றுள்ள விதம்**




6ஆம் வினாவும் தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08 - 10 வரையான புள்ளி வீச்சில் 22% ஆனோரும்
06 - 07 வரையான புள்ளி வீச்சில் 23% ஆனோரும்
03 - 05 வரையான புள்ளி வீச்சில் 30% ஆனோரும்
00 - 02 வரையான புள்ளி வீச்சில் 25% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




தெரிவு வினாக்களில் ஒன்றான இவ்வினாவும் இரு உபபிரிவுகளைக் கொண்டது. (அ), (ஆ), பிரிவுகளுக்கு முறையே 96%, 66% ஆன பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர்.

இவ்வினா (அ), (ஆ) எனும் இரு பிரிவுகளைக் கொண்டது. பரீட்சார்த்திகள் இவ்வினாவிற்கு திருப்திகரமாகவே விடையளித்துள்ளனர்.

**பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- வினா(ஆ) கேட்கப்பட்டதுக்கு ஏற்ப விடையை பகுத்து எழுதத் தவறியமை.
- சொந்த மொழிநடையில் எழுதத் தவறியமை.

**அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள் :-**

- பாடலில் வரும் விடயங்களை சிறுசிறு தலைப்புகளின் கீழ் தொகுத்து எழுதப் பயிற்றுவித்தல். உதாரணம் - கொடுக்கப்பட்ட பாடலான பங்கப் பழனத்து...............எனும் பாடலில்
  - (1) நாட்டுவளம்
  - (2) மன்னனின் வீரம்
  - (3) பெண்ணின் காதல் என்பவை.
- விடையினை சொந்தமொழிநடையில் எழுதப் பயிற்றுவித்தல்.
- விடைகளை தொகுத்தும், பகுத்தும் எழுதுவதற்குப் பயிற்றுவித்தல்.

**வினா இல.7**

**7.** **தமிழ்ப் பண்பாடு** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் யாவை எனக் குறிப்பிடுக.

(ஆ) அவற்றுள் உலக மனப்பான்மை என்ற பண்பாடு பற்றி விவரிக்குக. (10 புள்ளிகள்

தமிழர் பண்பாடு

(அ.) - தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள்

- பரந்த உலக மனப்பான்மை
- விருந்தோம்பல்
- பிறரன்பு
- ஈகை, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.
- என்கடன் பணி செய்து கிடப்பதே.
- மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை.
- மனத்தூய்மை, விடா முயற்சி
- யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற மனநிலை
- உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல். (எவையேனும் 4)

(04 புள்ளிகள்)

(ஆ.) உலக மனப்பான்மை

- மேற்றிசை நாடுகளோடும் கீழ்த்திசை நாடுகளோடும் இந்தியாவின் வட பாகத்தோடும் பண்டமாற்று வணிகத்தில் ஈடுபட்டமை.

- சங்க இலக்கியங்கள் காட்டும் வணிகச் செய்திகளூடாக 'யாதும் ஊரே யாவரும் கேளிர்.......' என்ற மனப்பான்மையை வளர்த்தெடுத்தல்.

- சமணம், பௌத்தம் முதலிய சமயங்களை தமிழ்நாட்டில் வரவேற்றமை.

- பிற மக்களின் நலத்தைக் கருதும் பண்பு, தமக்கென வாழா பிறர்க்குரியாளன் என்னும் கோட்பாட்டை வளர்த்தமை.

(06 புள்ளிகள்)

(04 + 06 = 10 புள்ளிகள்)

7ஆம் வினாவிற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்




7ஆம் வினாவும் தெரிவு வினாவாகும். இவ்வினாவிற்குரிய மொத்தப் புள்ளிகள் 10 ஆகும்.

08 - 10 வரையான புள்ளி வீச்சில் 14% ஆனோரும்
06 - 07 வரையான புள்ளி வீச்சில் 16% ஆனோரும்
03 - 05 வரையான புள்ளி வீச்சில் 26% ஆனோரும்
00 - 02 வரையான புள்ளி வீச்சில் 44% ஆனோரும்
புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.




தெரிவு வினாக்களில் ஒன்றான இவ்வினாவும் இரு உபபிரிவுகளைக் கொண்டது. (அ), (ஆ), பிரிவுகளுக்கு முறையே 82%, 52% ஆன பரீட்சார்த்திகளே சரியான விடையளித்திருந்தனர்.

**இவ்வினா(அ), (ஆ) எனும் இரு பிரிவுகளைக் கொண்டது.**

**பரீட்சார்த்திகளின் விடைகளில் அவதானிக்கப்பட்டவை.**

- பாடப்பரப்பை ஆதாரமாகக் கொள்ளாது பொதுவான உலகமனப்பான்மை பற்றி எழுதியமை.
- விடையை பொருத்தமாக முன்வைப்பதில் இடர்பட்டுள்ளமை.
- வினாவுக்கேற்ப விடையைப் பகுத்து எழுதத் தவறியுள்ளமை.

**அடைவுமட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:-**

- பாடப்பரப்பை ஆதாரமாகக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடையெழுதப் பயிற்றுவித்தல்.
- சிறுசிறு தலைப்புக்களாகப் பகுத்து விடயங்களை முன்வைப்பதற்கு வழிப்படுத்தல்.
- விடையைச் சுட்டிப்பாக எழுதுவதற்கு பயிற்சியளித்தல்.
- கட்டுரை ஆசிரியரின் நோக்கம், அந்நோக்கத்தை நிறைவேற்றப் பழந்தமிழ் இலக்கியங்களை எடுத்துக்காட்டாக முன்வைத்தல், ஆசிரியர் கையாண்ட உத்தி என்பவற்றை மாணவர்களுடன் கலந்துரையாடி தெளிவுபடுத்துதல்.
- கட்டுரையில் கொடுக்கப்பட்ட விடயங்களை தொகுத்தும் பகுத்தும் நோக்குவதற்கு வழிப்படுத்துவதுடன் அதனைச் செம்மையாக வெளிப்படுத்தவும் பயிற்றுவித்தல்.

### 2.3.3 வினாப்பத்திரம் III இற்கு விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளின் தொகுப்பும் பொதுவான ஆலோசனைகளும்

**அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள்**

- ★ மாணவர்கள் இலக்கியப் பாடப்பரப்பில் பூரண அறிவைக் கொண்டிருக்கவில்லை.
- ★ பாடற்பகுதிகள், உரைநடைப் பகுதிகள் என்பவற்றை நயந்து இரசனையுடன் அவற்றை வெளிப்படுத்தும் திறன் குறைவாகக் காணப்படல்.
- ★ அரும்பதங்களுக்கான பொருள் விளக்கங்களை சரியாகப் புரிந்துகொள்ளாமை.
- ★ வினாக்களுக்கு விடையளிக்கப் போதிய பயிற்சிகள் பெற்றிருக்காமை.
- ★ இலக்கியப்பகுதிகளுக்கு விடையளிக்கும் போது மேற்கோள் காட்டி எழுதத் தவறியமை

**ஆலோசனைகள்**

- ★ விதிக்கப்பட்ட பாடநூல்களின் பாடப்பரப்பினை நுணுக்கமாகக் கற்பித்தல்.
- ★ பாடப்பரப்புகள் தொடர்பாக வாய்மொழி வினாக்களுக்கு விடையளிக்கச் செய்தல்.
- ★ வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதும் பயிற்சிகள் வழங்குதல்.
- ★ மாணவர்கள் எழுதிய விடைத்தாளைத் திருத்தி பின்னூட்டல் வழங்கல் முக்கியமாகும்.
- ★ படைப்புக்கள், நூல், நூலாசிரியர் ஆகிய தயாரிப்புக்களை உள்ளடக்கி பட்டியல் தயாரித்தல்.
- ★ நூல், நூலாசிரியர், நூல் எழுதப்பட்ட காலம், பின்னணி போன்ற பொதுவான விளக்கத்தினை ஆசிரியர் வழங்குதல்.
- ★ இலக்கியம் சம்பந்தமான பொது அறிவுப் போட்டிகளை நடாத்துதல்.
- ★ பாடசாலை நிகழ்வுகளில் இலக்கியச் சொற்பொழிவுகளை நிகழ்த்துதல்.
- ★ ‘சொல்லாடுகளம்’ போன்ற நிகழ்வுகளுக்கு ஊக்கமளித்தல்.
- ★ கணிப்பீட்டில் பாவோதல் போன்றவற்றுக்கு முக்கியத்துவமளித்தல்.
- ★ சொல், சொற்றொடர், அணிச் சிறப்புக்களை இனங்கண்டு கற்பித்தல்.
- ★ பாடப்பரப்பினை உள்ளடக்கிய அருஞ்சொற்பொருள் அகராதியைத் தயாரித்தல்.
- ★ மாணவர்கள் தாம் எழுதிய விடைகளை முன்வைத்தலும் கலந்துரையாடலும்.

## பகுதி III

## 3 விடையளிக்கும்போது அவதானிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

### 3.1 விடையளிக்கும்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்

**பொதுவானவை**

- ★ மாணவர்கள் வினாப்பத்திரங்களிலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்?, கட்டாய வினாக்கள் எவை?, நேர ஒதுக்கீடு எவ்வளவு?, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களை சரியாக வாசித்து விளங்கி விடையளித்தல் வேண்டும்.
- ★ இதற்காக வழங்கப்பட்டுள்ள மேலதிக நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- ★ இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைகளை விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.
- ★ எழுத்துப் பிழைகளின்றி தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.
- ★ ஒவ்வொரு விடைத்தாளின் இரு பக்கங்களிலும் சுட்டெண்களைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.
- ★ வினா இலக்கத்தையும் பிரிவு வினாக்களின் இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்குமுன் தெளிவாகவும் சரியாகவும் குறிப்பிட வேண்டும்.
- ★ கேட்கப்பட்ட வினாக்களின் தன்மைக்கேற்ப சுருக்கமாகவோ விளக்கமாகவோ விடையளித்தல் வேண்டும்.
- ★ கட்டமைப்பு, கட்டுரை வகை வினாக்களுக்கு விடையளிக்கும்போது, தர்க்கரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் விடையளித்தல் வேண்டும்.

**வினாப்பத்திரம் - I**

★ 1ஆம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும் போது ஒவ்வொரு வினாவிற்கும் மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து அவ்விடைக்குரிய இலக்கத்தைக் கொண்ட கூட்டினுள் தெளிவாகப் புள்ளியிடல் வேண்டும்.

★ இவ்வினாப்பத்திரம் 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. 1-20 வரையான வினாக்கள் மொழிவளத்தைக் கணிப்பிடுவதாக அமைகின்றன.
20-30 வரையான வினாக்கள் இலக்கணப்பயன்பாட்டுத்திறன் பற்றி கணிப்பிடுவதாக அமைகின்றன.
31-40 வரையான வினாக்கள் நடைமுறைப் பயன்பாட்டுச் சொற்கள், கிரகித்தல், பந்தியாக்கம் என்பவற்றில் மாணவர்களது ஆற்றலைக் கணிப்பிடுவதாக அமைகின்றன.

★ மாணவர்கள் இலக்கண வினாக்களுக்கு விடையளிக்க இடர்படுவதனால், அதில் அதிக கவனம்செலுத்தி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

★ அதிக பயிற்சிகளைச் செய்வதன் மூலம் இவ்வினாப்பத்திரத்துக்குரிய புள்ளிகளை அதிகரித்துக்கொள்ள முடியும்.

★ விடையளிக்கும் போது சரியான விடையைத் தெரிவுசெய்ய இடர்ப்படின் கொடுக்கப்பட்ட கவனக் கலைப்பான்களை (பிழையான விடைகளை) நீக்கி மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்வதற்குப் பயிற்சி வழங்குதல்.

**வினாப்பத்திரம் - II**

★ மாணவர்கள் வினாப்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாகவும் தெளிவாகவும் வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும்.

★ இவ்வினாத்தாள் 5 வினாக்களை கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

★ இரண்டாம் வினா கட்டுரை எழுதுவது தொடர்பானதாகும். மாணவர்கள் கொடுக்கப்பட்ட நான்கு கட்டுரைகளின் வழிகாட்டற்குறிப்புகளையும் நன்கு வாசித்து பொருள் பொருத்தத்துடன் எழுதுவதற்கு இலகுவாக அமைந்த கட்டுரையைத் தெரிவு செய்ய வேண்டும்.

★ கட்டுரை எழுதும்போது பின்வரும் விடயங்களைப் பின்பற்றி எழுதவேண்டும்.

- பொருள் அமைவும் அளவும்
- கருத்து வெளிப்பாடும் மொழிச்செம்மையும்.
- எழுத்து நுட்பங்கள்
- பொருத்தமான தலையங்கம்
  (குறைந்த சொற்களைக் கொண்ட கவர்ச்சியான தலைப்பு)

★ சுருக்கம் எழுதும் போது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்

- பிரதான கருத்து, துணைக்கருத்துக்கள் இனங்காணப்படல்.
- சொந்த மொழிநடையில் எழுதுதல்.
- பிரதான அம்சங்களை அனுசரித்து கட்டுக்கோப்பாக கருத்துச் சிதைவின்றி எழுதுதல்.
- ஒரு பந்தியாக எழுதுதல்.
- குறித்த சொல்லளவில் எழுதுதல்.

★ கிரகித்தல் வினாவிற்கு விடையளிக்கும் போது கொடுக்கப்பட்ட உரைநடைப்பகுதியை நன்கு வாசித்து கிரகித்து மிகச்சரியான விடையை முழுமையாகக் கொடுக்க வேண்டும்.

★ 5 ஆம் வினாவில் இரு தெரிவு வினாக்கள் வழங்கப்படும். மாணவர்கள் இரு வினாக்களில் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதவேண்டும். தமக்கு மிகப் பரிச்சயமான விடயத்தை தெரிவுசெய்து எழுதுதல் நன்று.

★ அவதானிக்க வேண்டிய விடயங்களை அனுசரித்து எழுதுதல் வேண்டும்.

- அமைப்பு
- பொருள் பொருத்தம்
- மொழிநடை

★ ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடைகளை எழுதும்போது விடைத்தாளில் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.

★ விடைத்தாளின் ஒவ்வொரு பக்கத்திலும் சுட்டெண்ணைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.

★ வினா இலக்கத்தையும் பகுதி வினா இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்க முன்பு தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடல் வேண்டும்.

**வினாப்பத்திரம் - III**

மாணவர்கள் வினாப்பத்திரத்திலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்? கட்டாய வினாக்கள் எவை? நேர ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களைச் சரியாக வாசித்து தெளிவாக விளங்கி விடையளித்தல் வேண்டும்.

- ★ விதிக்கப்பட்ட பாடநூல்களின் பாடப்பரப்பினை நுணுக்கமாகக் கற்பித்தலும் - கற்றலும் மாணவர்கள் சரியான விடையைத் தெளிவாக எழுதுவதற்கு வாய்ப்பாக அமையும்.
- ★ வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை எழுதும் பயிற்சிகளை வழங்குவதால் அடைவுமட்டத்தை அதிகரிக்கலாம்.
- ★ படைப்புக்கள், படைப்பாற்றல், ஆசிரியர் கையாண்ட உத்தி என்பவற்றை நுணுக்கமாகக் கற்பித்தல் வேண்டும்.
- ★ விதிக்கப்பட்ட பாடப்பரப்புகள் தொடர்பாக சொற்பொழிவு, விவாதம், ஒப்படைகள் என்பவற்றை வழங்கி மாணவர்களை இலக்கிய ஆளுமைமிக்கவர்களாக மிளிரச் செய்யலாம்.
- ★ வினாவுக்கு ஏற்ப விடையளிக்கும் திறனை விருத்தி செய்வதற்குப் பயிற்சிகள் அவசியம்.
- ★ இலக்கியங்களை நயத்து, வெளிப்படுத்துவதற்கான களங்களை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

## 3.2 கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்

**பாடரீதியானவை**

★ மாணவர்கள் நவீன அறிவுக் கருவூலங்களைத் தேடிக் கற்று அவற்றைப் பொருத்தமான இடங்களில், குறிப்பாக வினாப்பத்திரம் II இல் கட்டுரை, கடிதம் போன்ற எழுத்தாக்கங்களுக்கு பிரயோகிக்க வேண்டும்.

★ பாடங்களைக் கற்பதன் மூலம் பெறும் அறிவை **வினாக்களுக்கு ஏற்ப** உருமாற்றி விடையளிக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

★ வினாக்கள் வினவப்படும் விதத்தைக் கவனத்திற் கொண்டு விடையளித்தல் அவசியமாகும். (தெளிவுறுத்தல், சித்திரித்தல், விவரணம் எழுதுதல், விளக்கம் எழுதுதல், ஆராய்தல், எடுத்துக்காட்டுதல், வலியுறுத்தல் போன்றன.)

★ **கற்றல் இடமாற்றம்** இங்கு வேண்டப்படுகிறது. அதாவது தாம் கற்ற விடயங்களைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்திக் கொள்ளும் திறன் அவசியமாகும்.

★ சொல்லாக்கம், வாக்கிய அமைப்பு, புதிய சொற்களின் பிரயோகம், வழுக்களைத் தவிர்த்தல் (திணை, பால், எண், இடம், காலம் ஆகிய வழுக்கள்), சொற்பிழைகளற்றிருத்தல்.

★ சொந்த மொழிநடையில் புதிய சிந்தனைகளைப் புகுத்தி விடையளிக்கும் திறனை விருத்தி செய்ய வேண்டும்.

★ செய்யுட்களுக்கு பொருள் விரிப்பதிலும் அவற்றை நயப்பதிலும் அதிக பயிற்சிகளைச் செய்வது அவசியமாகும்.

★ ஆக்க வினாக்களுக்கான விடைகள் ஆழமான பொருள் கொண்டனவாகவும் சீரான அமைப்புடையனவாகவும் இருப்பது சிறந்தது. அவை அதிக புள்ளிகளை ஈட்டிக்கொள்ளும் வழிமுறையும் ஆகும்.

★ பாட விடயத்தைக் கற்பித்து முடித்தவுடனேயே வினா விடைப் பயிற்சிகள் வழங்கி மதிப்பீடு செய்வது அதிக பலனைத் தரும்.

★ மாணவர்கள் தமிழ்மொழி, இலக்கியம் சார்ந்த தகவல்களைச் சேகரிக்கவும், சுயமாகக் கற்றலில் ஈடுபடவும் தூண்டுதல்.

★ மொழி கற்றல் கற்பித்தலின்போது அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் தேர்ச்சி பெறும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

- ★ இலக்கியத்தைக் கற்பிக்கும்போது நயந்து கற்பித்தலும் மாணவர்களை நயக்கச் செய்தலும் வேண்டும். பாடப்பரப்பில் வரும் விடயங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் கொடுத்தல், பகுத்தும் தொகுத்தும் எழுத வழிப்படுத்தல், பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்யத்தூண்டுதல்.
- ★ மொழிச் செம்மை பற்றிய கரிசனை அதிகம் வேண்டப்படுகிறது. எழுத்துப் பிழைகள், வாக்கியப் பிழைகளைத் தவிர்ப்பதற்கான பயிற்சிகளும் ஆழமான, அழகிய சொந்த மொழிநடையில் விடைகளை முன்வைக்கும் திறனையும் விருத்தி செய்வதற்கு அவ்வப் பாடமுடிவில் மேலதிக பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்யத் தூண்டுதல்.
- ★ புதிய நூல்களைத் தேடி வாசிக்கவும், அவற்றிலிருந்து பெறும் தகவல்களைக் கொண்டு கட்டுரை, கடிதம், சிறுகதை, துண்டுப்பிரசுரம் போன்ற ஆக்கங்களை உயர்ந்த மட்டத்தில் படைப்பதற்கும் வழிகாட்டுவதுடன் அவற்றில் சிறந்தவற்றைக் காட்சிப்படுத்தி ஊக்குவிப்பு வழங்குதலும் பாராட்டுதலும் வேண்டும்.